உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-கூ.] விரோதிகிருது௵ வைகாசிமீ. [பகுதி-எ.

யசோதரகாவிய ஆராய்ச்சி

(உகசுகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ஸ்ரீ: டி. எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் எழுதியது.]

மேலேகாட்டிய சுலோகத்தில், அரசன் கருநெய்தற் பூவையும் கள்ள நாயகனையும் சிலேடையிற் சொல்லி, அரசி கள்ள நாயகனுற் புடைபட்டதைக் குறிப்பாற் காட்டுகின்றான். 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂—புரை புரை தோறும்; 𑌸𑌵𑍍𑌯𑌾𑌜𑌤𑌾—நீர்சேர் பொள்ளலிவ் வுருவிற்றாய; 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌨𑌨𑌨—கருத்த வாயையுடைய (கருத்த வாயை யுடைய கள்ள நாயகனால்; நீலநிறமான வாயையுடைய கருநெய்தற் பூவினால்). வடமொழியில் "𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌨𑌨𑌨" என்பது ஒன்றன் பாலுக்கும் உயர்திணை ஆண்பாலுக்கும் பொதுவாகிய மொழி; அத்தகைய பொதுமொழி கிடைக்கப்பெறாது இங்கு "இருநிற மலரினால்" என்று ஒன்றன்பாலாகக் கூறினார்.

(9) 𑌚𑍈𑌤𑍍𑌯𑌵𑌾𑌸𑌂 𑌸𑍍𑌵𑌿𑌤𑌨𑌾𑌤𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 -
𑌶𑌾𑌠𑌾𑌯 𑌵𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌞𑍀 ।
𑌉𑌦𑍍𑌵𑌮𑌹𑌮𑍍𑌨𑌾 𑌜𑌨𑌨𑍀𑌵𑌸𑍀𑌵𑌂
𑌜𑌗𑌾𑌮 𑌰𑌾𑌜𑌾 𑌸𑍍𑌵𑌵𑌿𑌷𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌃 ॥
𑌵𑌿𑌨𑌯𑌵𑌿𑌨𑌮𑍍𑌰𑌨𑌮𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌨𑌂 𑌸𑌾 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌿𑌜𑌾𑌤𑍍𑌮𑌜𑌂
𑌵𑌿𑌵𑍃𑌤𑌨𑌯𑌨𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌨𑌾𑌵𑌾𑌤𑌹𑌰𑍍𑌷𑌹𑌰𑍍𑌷𑌵𑌾𑌦𑌰𑌾𑌗𑌾 ।
𑌨𑌿𑌕𑌟𑌵𑌿𑌯𑍃𑌤𑌂 𑌮𑌯𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌯 𑌵𑌦𑍍𑌰𑌾𑌥𑌦𑌾

*

வ்ய்ரஷ்8யிகம் ஹெஜெ ஹ-ஙூஸிஹ்ரு-ு-தொாா-ுவயொாயஸா ॥
க-ுஜெயராவமிதா॥ஹிஃ ஸா ஸதீ ர்ந்தவாத்ர ா -
த்தநயஸிராஸி கூ்ரஙா நவ்ருஜ-ுவலாக்ஷெதளவாது ।
ஜஷஜஸிஷஷெஸஷாஜ-ுவ-ூராம ராக்ஷ தீவபும்
காய்ரதகாரவாஜொநூ-ஙூஷி தாராதிவமூஃ॥”

இதன்பொருள்:—இவ்வாறு இரவில் நடந்த செய்தியைக்குறிப்புக்காட்டி வார்த்தையாடி, அரசியைத் தெளியச்செய்து, அரசன் தீராத்துக்கத்தினல் ஓரிடத்தும் நிலைகொள்ளானுய்த் தன்ருயின் சமீபமடைந்தான். அப்பொழுது, சந்திரமதி தாழ்ந்து தலைவணங்கிய தன் மகனை விரிந்து மலர்ந்த விரண்டு கண்களால் பருகுபவள் போல அன்புற்றுப் பார்த்து, அவன்றலையைத் தன்முகத்தோடு பொருத்தி உச்சி முகந்து × மிக்க களிப்புற்ருள். அவள் கற்புடைய மங்கையர்களைக்கொண்டு இரத்தின பாத்திரத்தில் புத்தப் புதிய அறுகுகளையும் அக்ஷதைகளையும் எடுத்துவரச்செய்து, அவைகளைத் தன் மகன்றலையில் தூவி, 'நீ கையிலேந்திய உடைவாளினல் பகைவர்களையெல்லாம் அடியோடு மடுத்து, எல்லா வளங்களும் தழைக்க இப் பூவுலகை யாளுவாயாக' வென்று ஆசி கூறினுள்.

“ஆயிடை யரச னுள்ளத் தரசினை விடுப்ப வெண்ணித்
தாயமர் கோயி லெய்திச் சந்திர மதிதன் முன்னர்ச்
சேயிடை யிறைஞ்ச மற்றித் திரைசெய்நீ ருலக மெல்லா
நீயுயர் குடையின் வைகி நெடிதுடன் வாழ்க வென்ருள்.” II 54.

(ம) “கிம் த-ு காஞ்சிரவ8-ுச்ய 8்ரமாக்ஷ ா
ஸிஹ்ரதம் க-ுவஶயொாஜீ-ுசஶக்ஷீழ ।
வ்ருத்த8ஷ்ய) த-ு 8யா நிஸி ஷ்ரஷ்டா
ஷெவி ஸஹ்ருதகஸீ திரிரொண ॥
தாஷ்ருஸம் த-ு ஸக்ரஷவ்ய-ுவஶஶ்யும்
ஜநீஸ ந 8யா ஹ்வஸதாவி ।
தத்வ-ுநஜ-ுநஸி கீஷிதஜ-ுஜெச்ச -
ஷ-ு-ுஹஸ்ஸா விதந-ுஜத 88 ஷ-ுஃவெழ॥”

இதன்பொருள்:—ஆனால், வெண்ணிலவானது கருநெய்தற்பூ வினை (பூவுலகு முழுவதையும்) மலரச்செய்து அதற்குப் பெருஞ் சிறப்பளிக்குஞ் சந்திரனை விட்டகன்று இன்றிரவு இருளுடன் சேர்ந்திருக்கத் தெளிவுறக் கண்டேன். நான் இதுவரையில் இஜ் ஜன்மத்தில் ஒருபொழுதும் இவ்வாறு கனவிலுங் கண்டதில்லை. இஃது என் மனத்தில் நன்றாகத் தைத்து எனக்குச் சகிக்க முடியாத துக்கத்தை விளைக்கின்றது.

"விண்ணிடை விளங்குங் காந்தி மிகுகதிர் மதியந் தீர்ந்தே
மண்ணிடை மழுங்கச் சென்றோர் மறையிருட் பகுதி சேரக்
கண்ணிடை யிறைவி கங்குற் கனவினிற் கண்ட துண்ட
தென்னுடை யுள்ளந் தன்னு ளீர்ந்திடு கின்ற தென்றான்." II. 56.

இவ்வாறே இவ்விரண்டு காவியங்களிலுமுள்ள ஸம்ஸ்கிருத சுலோகங்களுக்கும் தமிழ்ச்செய்யுட்களுக்கும் பொருளொன்றாயிருப்பதற்கு இன்னும் பல வுதாரணங்கள் எடுத்துக் காட்டல் கூடும். ஆதலின் ஐஞ்சிறு காப்பியத்தொன்றாகிய "யசோதரகாவியம்" வடமொழிக் காவியமாகிய யசோதர சரித்திரத்தை யொட்டி அதற்குப் பின்னர் இயற்றப்பட்டதெனக்கொள்ளல் பிழையாகாதெனத் தெளிதலாகும். அவ்வாறு கொள்ளுதல் தகுதியெனில், யசோதர காவியத்தின் காலம் ஒருவாறு கண்டறிய வழியுண்டு. அதனைக் கீழே காட்டுவாம்.

"பார்சுவநாத சரித்திர" மியற்றிய தாமே யசோதரசரித்திரமும் எழுதப்புகுவதாக, வடமொழி யசோதர சரித்திரத்தின் றுவக்கத்தில் வாதிராஜமுனிவர் கூறுகின்றார். அச் சுலோகம் அடியில் வருமாறு:—

"ஸ்ரீபார்ஶ்வநாதகாகுத்ஸ்தசரிதம் யேந கீர்த்திதம் ।
தேந ஸ்ரீவாதிராஜேந த்ருப்தா யாஶோதரீ கதா" ॥

ஆதலின் வடமொழியிலுள்ள "யசோதர சரித்திரம்" பார்சுவநாத சரித்திரத்திற்குக் காலத்தாற் பிற்பட்டதெனப் புலப்படுகின்றது. பார்சுவநாத சரித்திரத்தின் றுவக்கத்தில் வாதிராஜமுனிவர் தமக்கு

முற்பட்ட காலத்தினர்களாகிய பல பெரியோர்களின் பெயர்களையும் அவர்கள் செய்துள்ள நூல்களின் பெயர்களையும் கூறியுள்ளதுமன்றி, நூலினிறுதியில் தமது ஆசிரியர் ஸிம்மபுரத்திற் சாலச்சிறந்து விளங்கின ஸ்ரீபாலமுனிவரின் சீடர், அவர் பெயர் மதிசாகரமுனிவர் என்றும், நூல் முடிவுபெற்ற காலம் சகாப்தம் 947 (கி. பி. 1025) குரோதந வருஷம் கார்த்திகை மாதம் சுக்கிலபக்ஷத்து திரிதீயையும் புதவாரமுங்கூடிய நாளென்றும், அக் காலத்தரசர் மேனாட்டுச்சௌளுக்கிய ஜயசிம்மன் என்றும் தெளிவுறக் கூறியுள்ளார். பார்சுவநாதசரித்திரமும் இதுவரையில் எவராலுமச்சிட்டு வெளிவராததுபற்றி, அதினின்றும் அந்நூலின் காலத்தைக் காட்டும் சுலோகத்தைமட்டுமாவது இங்குக் காட்டுவது கடனுமெனக்கருதி அச் சுலோகம் அடியில் வரையப்பட்டுளது.

7 4 9 *

“ஶாகாப்தே நகவார்திரந்த்ரகணநே ஸம்வத்ஸரே க்ரோதநே
மாஸே கார்த்திகநாம்நி புத்திமஹிதே ஶுத்தே த்ருதீயாதிநே ।

†

ஸிம்ஹே பாதி ஜயாதிகே வஸுமதீம் ஜைநீ கதேயம் மயா
நிஷ்பத்திம் கமிதா ஸதீ பவது வ: கல்யாணநிஷ்பத்தயே ॥

ஆதலின், இங்கிலீஷ் வருஷம் 1025-ல் வாதிராஜமுனிவர் பார்சுவநாதசரித்திரம் என்ற வடமொழிக் காவியம் இயற்றினர். அதன் பின்னர் அவரே யசோதரசரித்திரம் என்ற வடமொழிக்காவியமும் செய்தனர். அந்த யசோதரசரித்திரத்தையே முதனூலாகக்கொண்டு, அதன் மொழிபெயர்ப்பென்றே பிழையாது நினைக்குமாறு, பின்னாட்களில் ஐஞ்சிறுகாப்பியத்தொன்றாகிய யசோதரகாவியம், அவராலோ எவராலோ ஜைநர் ஒருவரால் தமிழிற் பாடப்பட்டது என்று நன்கு வெளியாகின்றது. ஆயினும் கி. பி. 1025-வது வருஷத்திற்குப் பிறகு இந்நூல் எவரால் எக்காலத்தமைக்கப்பட்டதெ

---

* “ அங்காநாம் வாமதோ கதி: ” (இலக்கங்களின் போக்கு இடப்பக்கத்தேயாம்) என்றதினால் 947-என்று கொள்ளவேண்டும்.

† ஜயத்தை ஆதியாகவுடைய சிம்மன், அதாவது ஜயசிம்மன்.

ன்பது இதுகாறும் கண்டறியப்படவில்லை. அஃது இனியும் இந்நூலின் பழைய ஏட்டுப் பிரதிகள் பல கிடைக்கப்பெறின் அவைகளாலும், கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியோர்களாலும் தெளியத் தகும்.

ஸ்ரீபாலமுனிவர்

|

(சீடர்)

மதிசாகரமுனிவர்

|

(சீடர்)

வாதிராஜமுனிவர்

(அவர் செய்த நூல்கள்)

(1)
பார்சுவநாத சரித்திரம்
12-சர்க்கமுடையது
947-சகாப்தம் (கி. பி. 1025)
அக்காலத்தரசன்—ஜயஸிம்மன்
மேனாட்டுச் சௌளுக்கியவம்சத்தான்

(2)
யசோதரசரித்திரம்
(பார்சுவநாத சரித்திரத்திற்குப் பிந்தியகாலத் தெழுதப்பட்டது.)

|

(பிற்காலத்திய நூல்)

தமிழ் யசோதரகாவியம் (யாரெழுதியதோ. யசோதர சரித்திரத்தின் ஏறக்குறைய மொழிபெயர்ப்பு.)
கி. பி. 1025-க்குப் பிற்பட்டது.

யசோதரகாவியத்தின் காலவரையறை

இனி இச் சரித்திர காலத்தையும் பற்றிச் சிறிது ஆராய்வாம். இக் காப்பியத்துக் கதாநாயகனின் தந்தை “அசோகன்” எனப்படுவான். இவ் வசோகன் மகததேசத்தி லரசாண்ட சந்திரகுப்தன் மகனுவனோ வெனில், அல்லன் என்பது துணிபு. (1) சந்திரகுப்தனின் மகனுகிய அசோகன் மகததேசத்தரசன்; இக் காப்பியத்திற் கூறப்படும் அசோகன் அவந்தி நாட்டரசன். (2) அவனது இராஜதானி கங்காநதிக்கரையோரத்துள்ள பாடலீபுரம் எனப்படும்; இவனது இராஜதானி சிருப்பிரையாற்ருேரத்துள்ள உஞ்சயினியாகும். (3) அவன் நந்தனின் சந்ததியானுதலின் சந்திரவம்சத்தரசனுவன்; இவன் இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்தானுதலின் சூரியகுலத்தரசனுவன். ‘‘தத்ராவந்திஷு விக்யாதா வ்யஸ்யம்வம்ஶோத்பவாத்மநா। லக்ஷ்மீ விஶ்வம்பரேஶாநாம் ராஜ்யாயோஜ்ஜயிநீவஶீ ॥” வ்யா- “வ்யஸ்யம்வம்ஶே, ஐக்ஷ்வாக்வாதிக்ஷத்ரியகுலவிஶேஷே” என்று யசஸ்திலக சம்பு வென்ற வடமொழிக் காவியத்திலும் அதன் வியாக்கியானத்திலும் உளது காண்க. (4) இவனுக்கு, மஹாபுராணம், ஸ்ரீபுராணம், யசஸ்திலகசம்பு, யசோதர சரித்திரம் இந் நூல்களிலொன்றிலேனும் அசோகன் என்ற பெயரே காணப்படவில்லை. அனைத்திலும் யஶோர்ஹ: (யசோகன்) என்னும் பெயரே காணப்படுகின்றது. ஆதலின் தமிழ்க்காப்பியத்துட் காணப்படும் “அசோகன்” என்ற பெயர் வடமொழிச் சிதைவுப்பெயரே யாகும். (5) வாதிராஜமுனிவர் தமது யசோதர சரித்திரத்தில் யஶோர்ஹ: (யசோகன்) என்னுஞ் சொற்ருெடருக்கு அடியில்வருமாறு சொற்பொருளுங்காட்டியிருக்கின்ருர். அஃதாவது,

“ஸ பாஹுபலிதே யத்க்ரூரிரஷாவஷாதம்
யஶோ த்ரிஶாம் ஹித்ரீஷு பஹுஶோவ்ய।
தத்ஸூநோர்ஹ: கவயோ யஶோர்ஹம்
வ்யதிஷாஷாநாத்யந்த்ர நிஸ்த்யூஹிஜ்ஞா: ॥” II. 3.

இதன் பொருள்:—"இவன் ஆம்பற்பூப்போன்று வெள்ளிய தன் புகழை எண்டிசைகளின் மதில்களிலும் பற்றிப்படிந்திருக்கச் செய்பவனாதலின், (வ்ரஷோதராதி) பிரிஷோதராதிகளாகிய சொற்றொடர்களின் வழக்கறிந்த பண்டிதர்கள் இவனை(யஶோவ) யசோகன் என்பார்கள்." மேலேகாட்டிய காரணங்களையெல்லாங்கொண்டு செவ்வனே ஓர்ந்து பார்க்கின் இவ் வசோகன் ஏறக்குறைய 2192வருஷங்களுக்குமுன் மகததேசத்தி லரசாண்ட அசோகன் அல்லன் எனத் துணியப்படும்.

இச் சரித்திரம் மகாபுராணத்தின் பிற்பகுதியில்,முனிஸுவிரத தீர்த்தங்கரருடைய அந்தரகாலத்தில் நடந்ததாகக் கூறப்பட்டுளது. ஒரு தீர்த்தங்கரர் இவ் வுலகினில் தோன்றியது முதல் அடுத்த தீர்த்தங்கரர் தோன்றும் வரையிலுமுள்ள காலமெல்லாம், அவ்விருவருள் முந்தியவரின் அந்தரகாலமெனப்படும். ரிஷபர் முதல் வர்த்தமானர் ஈறாக 24-தீர்த்தங்கரருள் முனிஸுவிரத தீர்த்தங்கரர் இருபதாமவர் ஆவர். ஆதலின் முனிஸுவிரததீர்த்தங்கரர் வர்த்தமான தீர்த்தங்கரருக்கு முந்தியவரென்பது சொல்லாமலே விளங்கும். வர்த்தமானதீர்த்தங்கரர் தோன்றி இப்பொழுது 2575-வருஷங்களாகின்றன. ஆதலின், முனிஸுவிரததீர்த்தங்கரருடைய அந்தரகாலத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் இச்சரித்திரம் இற்றைக்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முந்திய காலத்ததே யாகுமென்பது ஜைநர்களின் கூற்று.

மகாபுராணத்திலுள்ள எல்லாக் கதைகளையும் ஒப்ப இச் சரித்திரமும் சிரேணிகராஜனுக்குக் கணதரர்களாற் கூறப்பட்டதேயாம். சிரேணிகன் மகதநாட்டரசன். இராஜகிரகம் என்பது இவனது இராஜதானி. பிம்பிஸாரன் என்பது இவனுக்கு மற்றொரு பெயர். இவன் சிசுநாகவம்சத்திற் பிறந்தவன். சிசுநாகன் என்பானிலிருந்து ஐந்தாவதாவன். இவன் 28-வருஷம் அரசாண்டு, பிறகு தன்மகனான அஜாதசத்துருவென்பானுக்குத் தன்னரசுரிமையை யளித்துவிட்டுத்துறவறம்பூண்டு தேசசஞ்சாரியானான். இவனது இராஜ்யாரம்பகாலம் ஏறக்குறைய கி. மு. 428-என்று சரித்திரசோதகர்கள் கூறியுள்ளார்கள்.

ஆதலின் இவன் இற்றைக்குச் சற்றேறக்குறைய 2300-வருஷங்களுக்கு முன்னிருந்தவனாவன். இவனுக்குச் சொல்லப்பட்டதான இவ் யசோதரன் சரித்திரம் அக்காலத்திற்கு அஃதாவது 2300-வருஷங்களுக்கு முந்தியதேயாகுமென்பது மறுக்கமுடியாததோருண்மையேயாம்.

---

* ஜீவகாருண்யமும் புலாலுண்ணாமையும்

அநாதிமல முத்தபதியாகிய பரசிவன் தமக்கு ஒரு பிரயோசன முங்குறியாது அநாதிமலபெத்தராகிய ஆன்மாக்களுக்கு மலத்துவ நீக்கமுஞ் சிவத்துவ விளக்கமுஞ் சித்திக்கும்பொருட்டுப் பெருங் கருணையினாலே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியம் பண்ணுவர்.

(தாயுமான சுவாமிகள்)

"காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவி யைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற் கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்ட மைத்திட்
டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்
டிடருற வுறுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்து துயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே."

என்னும் ஆன்றோர் திருவாக்கானு முணர்க.

---

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பத்தாம் வருஷோற்சவ காலத்தில் (26—5—11-ல்) படிக்கப்பெற்றது.

இப் பஞ்சகிருத்திய கர்த்தாவாகிய சிவபெருமானது ஆக்ஞையினாலே அறிவென்பது ஒருசிறிதுந் தோற்றாத அஞ்ஞானமென்னும் பாசாந்தகாரத்தில் நெடுங்காலஞ் சிற்றணுப்பசுவாய் அருகிக் கிடந்த ஆன்மாக்களுக்குக் கன்மாநுசாரமாக வுண்டாகும் பிறப்பு அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என நான்கு வகைப்படும்.

1. அண்டசமென்பது:—முட்டையிற் றோன்றுவன; அவை பறவை, ஊர்வன, நீர்வாழ்வனவாதிகள்.

2. சுவேதசமென்பது:—வியர்வையிற்றோன்றும் பிராணிகள்; அவை கிருமி, கீடம், பேனாதிகள்.

3. உற்பிச்சமென்பது:—வித்து, வேர், கிழங்குகளை மேற்பிளந்து தோன்றும் தாவரவர்க்கங்கள்; அவை செடி, கொடி, விருக்கமாதிகள்.

4. சராயுசமென்பது:—கருப்பையிற் றோன்றும் பிராணிகள்; அவை தேவர், மனிதர், நாற்கால் விலங்காதிகள்.

இந் நால்வகைத் தோற்றத்தா னுதித்திடுமவைகளே தேவர், மனிதர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பினவாயு மிருக்கின்றன.

இங்ஙனம் வகுக்கப்பட்ட ஆன்மாக்கள் பஞ்சகிருத்தியாதிபதியாகிய கடவுளுடைய ஆணையினாலே புண்ணிய பாவ மிசிரகன்மங்கட்கேற்ப மேலாயுள்ள சுவர்க்கத்தினுங் கீழாயுள்ள நரகத்தினும் நடுவாயுள்ள பூமியினுங் கறங்குபோற் சுழன்றுசுழன்று திரியும். இப்படிப் பிறந்திறந்து மூவுலகத்தும் போக்குவரத்துடைய ஆன்மாக்கள் புண்ணியபரிபாகத்தினாலும் பிராயச்சித்த முதலியவற்றாலுந் தாவரமுதலிய கீழுள்ள யோனிகளனைத்தையுங் கடந்து ஐம்புலவுணர்ச்சியோடு ஆத்ம, அநாத்ம விவேகமமையப்பெற்ற ஆறறிவுடைய மேலாய மானிடப்பிறப்பி னுதிப்பது மிக அருமை! அருமை!! இவை ஆராயுமிடத்து;—

சிவஞானசித்தியார்

"அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றுயி ரத்தா
யுண்டுபல் யோநி யெல்லா மொழித்துமா நுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்."

என்றபடி பெறற்கரிய மனிதப்பிறப்பை யெடுப்பினுங் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தலரிதேயாம். அஃதின்றிப் பிறப்பினுஞ் சாஸ்திரமணுமும் விசாத மலைகளிலும் வனங்களிலும் குறவர் பறையர்களாகப் பிறவாமற் சாஸ்திரம் வழங்குந் தேசங்களிலே பிறப்பது மிகுந்த புண்ணியம்; அதினும் வேதாகமங்கள் வழங்காத மிலேச்சதேசத்தைவிட்டு அவை வழங்கும் ஆரியதேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்; அதினும் ஈனசாதிகளாகப் பிறவாமல் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் முதலிய நான்கு வருணங்களிற் பிறப்பது மிகுந்த புண்ணியமாம்; அதினுங் கல்வி கேள்விகளை யடைதல் மிக அருமை; அதினும் புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயங்களின் ஆழாது அகச்சமயமாகிய சைவசமயத்தைச்சார்ந்து, அதன்வழி அரிய முத்திநிலையைப் பெறுதல் மிக அருமையேயாம்.

சிவஞானசித்தியார்

"நார்பயி றேயந் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுதந்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே."

சிவஞானவள்ளலார்

"மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதினுந்
துக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிது
நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னத்தான்
முக்க ணீசனுக் காட்படல் முற்றினு மரிதே." என

ஏனைய பிறவியினும் இம் மனிதப்பிறவி யருமையென்ப தெதனு லெனின்;—மெய், வாய், கண், மூக்குச், செவியென்னும் ஐம்பொறி வழித்தாய்ச் சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும் விடயங்களை

யறிதலுடன் இது நன்மை; இது தீமை; இது நித்தியம்; இஃது அநித்தியம்; இஃது ஆத்மா; இஃது அநாத்மா என்னும்பேதங்களைப் பகுத்தறியும் அகக்கரண வாற்றலாகிய ஆறறிவு பொருந்தி விளங்கலால் விசேடமேயாம்.

ஏனைய பிறவிகளினும் தேவப்பிறவி விசேட அறிவுடையதன்றோ? அதினும், மனிதப்பிறவி விசேடமெனக் கூறிய தென்னையோவெனின், தேவப்பிறவி மேலான அறிவுடையதேனும் புண்ணிய பரிபாகத்திற்கேற்பப் போகமொன்றையே அனுபவித்தற் குரியதன்றிக் கன்மம், பக்தி, தவம், தானந், தியானம், ஞானமுதலிய ஆன்மலாபத்தைத் தேடிக்கொள்வதற் குரியது இவ் வுலகத்திற்குரிய மனிதப் பிறவியேயாம்.

சிவஞானசித்தியார்

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ."

என்பவற்றானு முணர்க. இவை நோக்கியன்றோ,

"எண்ணரிய பிறவிதனின் மானுடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காண்"

எனத் தாயுமானசுவாமிகளருளியதும்; இன்னும்,

"பெறுதற் கரிய பிறப்பீ திதன்போக்
கறிதற் கரிய வவதி—பிறிதொன்றை
நாடுதற்கு நேரமுண்டோ நன்னெஞ்சே முத்திநெறி
கூடுதற்கல் லாதகுறித் து." குறுந்திரட்டு

என ஆன்றோ ரருளியதுங் காண்க. ஆதலாற்பெறற்கரிய இம் மனித தேகத்தைக்கொண்டே, பெறுதற்கரிய பேரானந்தப் பெருஞ்செல்வமாகிய முத்திப்பேற்றைப் பெறுதல்வேண்டும். இதுகுறித்தன்றோ,

"மடல் விரிந்த மரைமலர் வைகுவோன்
சடமனைத் தையுந் தந்து முவந்தில

ளிட ராறுக்குமென் றெண்ணிநன் மானுட
வுடல் படைத்ததி னேகையுற் றுனரோ." பாகவதம்

என்றதும், ஆன்மாக்கள் அரிய முத்தியடைதற்கு ஏதுவாகத் தாச மார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் சரியை யாதிகளே சோபான மாயினும், முதலில் ஆன்மாக்கள் கைக் கொள்ளவேண்டியவை சீவகாருண்ணியமும் பிறவுயிர்கொல்லாமை யும் கொன்றதைத் தின்னாமையுமேயாம்.

பட்டினத்தடிகள்

"கொல்லாமற் கொன்றதைத் தின்னமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வர் தருவாய் சிதம்பர தேசிகனே."

தாயுமானசுவாமிகள்

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதா ராரோ வறியேன் பராபரமே."

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று."

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்கும் என்றதும்,

திருவருட்பிரகாசவள்ளலார்

"கலை யிருந்ததோர் திருச்சிற்றம் பலத்திலே கருணை
நிலை யிருந்தது நினைத்தவை யாவையும் பெறலாம்
மலை யிருந்தென விருப்பிரேல் வம்மினோ வன்றிக்
கொலை விரும்புவீ ரெனிற்புறத் தேகுமின் குலைந்தே."

"கதி யிருக்கின்ற திருச்சிற்றம் பலத்திலே கருணை
நிதி யிருக்கின்ற தாதலா னீவிர்க ளெல்லாம்
பதிய விங்ஙனே வம்மினோ கொலைபயில் வீரேல்
விதியை நோமினோ போமினோ சமயவெப் பகத்தே."

எனக் கூறியவைகளானு முணர்க. ஆதலால் முற்கூறியவற்றிற் சீவ காருண்ணியமென்பது யாதெனின் சீவர்களுக்குச் சீவர்கள் விஷய மாக வுண்டாகின்ற ஆன்மவுருக்கமேயாம்.

சீவர்கள் விஷயமாகச் சீவர்களுக்கு ஆன்ம வுருக்கம் எப்பொழுது உண்டாகுமெனின், சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தையனுபவிக்கக் கண்டபோதாயினுங் கேட்டபோதாயினும் இவ்வாறுண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்ம வுருக்கமுண்டாகு மென்றறிய வேண்டும்.

சீவகாருண்ணிய முண்டாவதற்கு உரிமை எதுவெனின், சீவர்களெல்லா மொருதன்மையாகிய இயற்கையுண்மையி னேகதேசங்களாகச் சர்வசத்தியுடைய கடவுளாற் சிருட்டிக்கப்பட்டபடியால் ஒருரிமையுள்ள சகோதரர்களே யாவர். சகோதரருளொருவர், ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதுந், துக்கப்படுவாரென்றறிந்தபோதும், அவரைத் தமது சகோதரரென்றுகண்ட மற்றொரு சகோதாருக்கு உருக்கமுண்டாவது சகோதர வுரிமையாகலின், ஒரு சீவன் துக்கத்தை யனுபவிக்கக்கண்டபோதும் துக்கப்படுமென் றறிந்தபோதும் மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்ம வுரிமையென்றறியவேண்டும்.

சீவர்கள் துக்கப்படுகின்றதைக்கண்டபோதுஞ் சிலர் சீவகாருண்ணியமில்லாமற் கடினசித்தர்களா யிருக்கின்றார்கள்; இவர்களுக்குச் சகோதரவுரிமையில்லாமற்போவது ஏனெனின், துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும், துக்கப்படுகின்றாரென்றும், துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்மஅறிவு என்கின்ற கண்ணனது அஞ்ஞானாந்தகாரத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும், அவைகளுக் குபகாரமாகக்கொண்ட மனமுதலானவுபகரணங்களாகிய கண்ணாடிகளும் பிரகாசப் பிரதிபலித மில்லாமற் றடிப்புள்ளவைகளாயிருந்தபடியாலுங் கண்டறியக்கூடாமை யாயிற்று. அதனாற் சகோதரவுரிமையிருந்துஞ் சீவகாருண்ணிய மில்லாதிருந்ததென் றுணரற்பாலது. விரிவஞ்சி இம்மட்டோடு விடுத்தாம்.

கொல்லாமை

இனிக் கொல்லாமையாவது யாதெனின்;—எக்காரணம் பற்றியேனும் பிறவுயிர்களை வதைத்தல் கூடாதென்பதேயாம். அதினுந் தன்

சரீரம் வலுவேறிப் பெருக்குமாறு பிறவுயிர்கொன்று அருந்துதல் மிகுந்த பாதகமேயாம். அதுபற்றியே,

> "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
> னெங்ஙன மாளு மருள்" என்றும்,

"எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகு மிலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயி, லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி யிரங்காது கொன்றருந்து மிழிவினோரை, வவ்வியம தூதருந் தண்டஞ் செய்து வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து, வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு வேதனைசெய் திடுவரென வோது நூலே" என்றும்,

கூறிய ஆன்றோர் வாக்கியங்களைக்கருதி அத் தீயதொழிலை விடலே அறிஞர் கடமையாம்.

சிலர் பரம்பரையாய் மாம்ச பட்சணமுடையவர்களென்றும் அக் குலத்தில் உற்பவித்ததினால் ஊனருந்துதல் குற்றமாகாதென்றுங் கூறுவதென்னையோவெனின், தங்களுடைய பிதா முதலியோர் வேதாகமங்களையோதியுணர்ந்து புண்ணியத்திற்குள்ளும் பாவத்துக்குப் புறம்புமாகத் தாமும் நடந்து பிறரையும் நடப்பிப்பார் யாவர் அவரையே அறிவுடையோர் பிதாவென அங்கீகரித்து அந்நெறியே நடவாநிற்பர்கள்; அதுவன்றித் தன்னுடைய மாதாபிதா வேதாகம விலக்காகிய தீநெறிச் செல்வார்களாயின், அந்நெறியே முறையென்று புத்திரன் நடப்பது வேதாகம ஒழுக்கமுமன்று; உலகின்கண் அவ்வாறு நடப்போர்களையுங் காணேம்; வேதாகமத்திற் கூறிய விதி நிடேதங்களை யாய்ந்து நிடேதமின்றி விதிவழியொழுகுதலே அறிஞர் கடமையாம்.

> "தந்தைநடந் துளமுறையே நடப்பதொழுங் கெனிணொருவன்
> றாணி மீதே
> நிந்தைதருந் தொழில்புரிந்து நஞ்சருந்தி யிறந்தனனேல்
> நெறியென் னன்னோன்
> மைந்தாது புரிவதிலை யெவரேனுந் தருமநெறி
> வழுவி லோரே
> யந்தமிகு தாதைகண்மற் றவர்நடந்த நெறிநடப்ப
> தறிவா மன்றே." எனவும்,

சிவஞானதீபம்

"கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
கூறரிய மேலான ஞான மாகுங்
கொலையாதி யகன்ருெழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறிலுயிர்க் கிதமான வாழ்வ தாமே." எனவும்,

கூறியவாற்ருனுணர்க.

ஆனல், சிலர் ஞானிகளென்றும் அதிவர்ணுச்சிரமிகளென்றும் அஷ்டசித்திமான்களென்றுங் கிடைத்தபோதருந்துதல் தோஷமாகாதென்றுங் கூறுகின்ருர்களே யெனின் பின் வருவனவற்ருற் காண்க.

திருவருட்பிரகாச வள்ளலார்

"மருவாணைப் பெண்ணுக்கி யொருகணத்திற் கண்விழித்து வயங்கு மப் பெண், ணுருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற வுறுவ னேனுங், கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்த னேலெங், குருவாணையெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக்கூருெணுதே."

ஆனுற் பிறவுயிர் வருந்தக் கொலைபுரிந்துண்ணுதல் குற்றமே யெனினும் அஃதின்றிப் பிறரிடம் விலைகொடுத்துவாங்கி யுண்ணல் குற்றமாமோ; அக்கொலைத் தோஷத்திற்கு அவனே பாத்திரனுகானே யெனின், கொள்வாரின்றி விற்பாருக்கு எத்தொழில்களும் உலகில் நடைபெறக்காணேம். இதுபற்றியே,

திருக்குறள்

"தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்."

எனக் கூறியிருப்பதாற் கொல்லாமற் றின்னுதலு மக்குற்றமேயாம்; ஆதலால் அச் சீவஜெந்துக்க ளருந்தும் அசுத்த மலாதிகளையேனுங் கண்டுணர்ந்து புலா லுண்ணுதலாகிய கொடிய செய்கையை நீக்குதலே அறிஞர்க் கழகாம்.

(இன்னும் வரும்)

கு. அண்ணாமலைப்பிள்ளை.

A MANUAL OF INDUSTRY

கைத்தொழிற் கண்ணாடி

இப்போது சில ஆண்டுகளாக இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் மகாசபைகூடுமிடங்களில் 'பொருட்காட்சிச் சந்தை' என்னும் 'வஸ்துப்பிரதரிசன சாலை' ஒன்று அமைத்துவருகின்றார்கள். பற்பல ஊர்களினின்று முக்கியமான விளைபொருள்களையும் அற்புதமான கைத்தொழிற் சாமான்களையும் மிகப் பிரயாசப்பட்டுத் தருவித்துவைத்து, அவற்றை ஜனங்கள் பார்த்து அவைகளின் உபயோகங்களையும் வேலையின் அருமையையும் தெரிந்துகொள்ளும்படி செய்கின்றார்கள். அதனால், எங்கெந்தப்பொருள்கள் எங்கெங்கே கிடைக்கின்றன, அவற்றின் உபயோகங்கள் எத்தன்மையன, பிறநாட்டுச் சாமான்களை விரும்பி வாங்குவதினும் இந்தியாவில் உற்பத்தியாகும் சாமான்களை வாங்கி உள்ளூர்க்கைத்தொழில்களை ஆதரிப்பதனால் இந்தியச் சாமான்களின் விலை இன்னும் குறையும். இந்தியக் கைத்தொழிலாளிகள் அபிவிருத்தியடைந்து மேன்மேலும் ஊக்கத்துடன் உழைப்பர். இந்தியாவில் திரவியோற்பத்தி யாதாரங்கள் பலப்படுவதன்றி யதிகரிக்கும் என்பனவாதிய விஷயங்களை ஜனங்கள் தெரிந்துகொள்வதற்கிடமாகின்றது. ஆனால், இப்படித் தெரிந்துகொள்வது எல்லோர்க்கும் இயலாதாதலாலும், பொருட்காட்சிச்சந்தையைக்கண்ணுற்றசிறுபான்மையோரும் அங்குவந்திருந்த சாமான்களின் விவரங்களையும் அவை உண்டாகுமிடங்களையும்

ஞாபகத் திருத்திக்கொள்வது அசாத்தியமாதலாலும், கைத்தொழிற் சம்பந்தமான பல விஷயங்களை "கைத்தொழிற்கண்ணாடி" என்னும் தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையின் வாயிலாக எழுதிவிடுக்கத் துணிந்தோம். இந்தியாவிற் பற்பலவிடங்களிலும் விளையும் பொருள்களின் விவரங்களும், அவற்றிற்கான வியாபாரவசதிகளும் ஆங்காங்குச் செய்யப்படும் கைத்தொழில்களின் விவரக்குறிப்புக்களும் இங்குத்தொகுக்கப்படும். "கைத்தொழிற்கண்ணாடி"யை அடிக்கடி பார்ப்பதனால், அவரவர்களுக்குத் தேவையான சாமான்கள் எந்த ஊரிற் கிடைக்கும் என்பது முதலான விஷயங்கள் எளிதில் தெரியும்; அந்தச் சாமான்களை வாங்கி ஆதரிப்பதனால், நம் தேசத்திற்பொருள் அபிவிருத்தியாவதற்குக் காரணமாகும். நம் நாட்டுப் பணம் நம் நாட்டிலேயே இருக்கும். பரதேசத்தவருக்கு நாம் பணத்தைக் கொட்டிக்கொடுத்து அவர்களுடைய சாமான்களை வாங்குவதனால் நம் தேசத்திற்கு க்ஷோபமும் அவர்களுக்கு க்ஷேமமும் உண்டாகும்.

AGRICULTURAL PRODUCTIONS
விவசாயப்பயிர்கள்

இந்தியாவில் பூமியின் தன்மை பலவிடங்களிற் பலவிதங்களாக வேறுபட்டிருப்பதனாலும், சீதோஷ்ண ஸ்திதிகளும் இடத்திற்குத் தக்கவாறு நானாவிதங்களாக இருப்பதனாலும், இத் தேசத்தில் விளைவிக்க முடியாத பயிரே இல்லை; எந்தப் பயிரையாயினும் இப் பரதகண்டத்தில் எங்கேனும் எக்காலத்திலேனும் விளைவித்தல்கூடும்.

வட இந்தியா:—தினை, சாமை, பயறு, காராமணி, துவரை, கடலை முதலிய நவதானியங்கள், எள்ளு, ஆமணக்கு முதலிய எண்ணெய் வித்துக்கள் ஆகிய இவை இந்தியாவில் எங்கும் சர்வசாமானியமாக விளையும். தேசத்திற்குப் பொதுவான இந்தப் பயிர்கள் நிற்க, வடக்கில் ஸிந்துநதியும் கங்காநதியும் பாயுமிடங்களைக் கவனிக்கின், பஞ்சாப் நதீதீரத்தில் (பாஞ்சால தேசத்தில்) கோதுமை முதலிய ஐரோப்பிய தானியங்களும், வங்காளத்தில் நெல் முதலிய இந்தியத் தானியங்களும் முக்கியமாகப் பயிராகின்றன; இவ்விரண்டிற்

கும் இடையில், அஃதாவது, டில்லியென்னும் ஹஸ்தினபுரமுதல் பட்ணு என்னும் பாடலிபுரம் வரையில் மேற்சொல்லிய இருவகைத் தானியங்களும் பயிராகின்றன; ஆயினும் பஞ்சாப் நாட்டின் பயிர்களே விசேஷம். வடமேற்கு மாகாணங்களெனும் அயோத்தியா, பிரயாகை முதலிய ஐக்கிய மாகாணங்களிற் கரும்புப்பயிர் விசேஷம். அவுரி, சணல், பேரிச்சை ஆகிய இவை வங்காளத்திலும், அபினி வடமேற்கு ஐக்கிய மாகாணங்களிலும் மேலே வங்காளத்திலும் பயிராகின்றன.

மத்திய இந்தியா:—இஃது இந்தியாவின் மத்தியப்பிரதேசமும், வட பம்பாயும், மத்திய மாகாணங்களெனப்படுவனவும் சேர்ந்ததாகும். இங்குச் சிவப்புக்கோதுமை விளைகின்றது; ஆயினும் பருத்தி விளைதற்கேற்ற கறுப்பு (ரேகட) பூமியே இந்தப் பாகத்தின் விசேஷமாகும்.

தேன் இந்தியா:—இங்குச் சீதளபூமிக்குரிய தானியங்கள் அருமையாகும். நெல், தெங்கு, கரும்பு, பனை ஆகிய இவை பள்ளத்தாக்குக்களிலும், 'காபி,' 'தேயிலை,' 'ஸின்கோனு.' (க்வைனுச் செடி), வாசனைத்திரவியங்கள் (சம்பார வர்க்கங்கள்) ஆகிய இவை மலைநாடுகளிலும் பயிராகின்றன.

பண்ணை மிருகங்கள்:—நீர்ப்பாய்ச்சல் மிகக்குறைவாயிருக்கும் காடாரம்பங்களிலும் ஆடுமாடுகள் செழித்து வளர்கின்றன. இந்தியப் பாலைவனத்தோரமாயுள்ள கச்சுதேசம் (கச்சபதேசம்) முதல் காச்மீரம் வரையிலுள்ள பிரதேசத்தில் ஆடு மாடுகள் கோடிக்கணக்காக இருக்கின்றன; அங்கிருந்து மழையதிகமான நாடுகளுக்கு வர வர, ஆடுமாடுகள் க்ஷீணித்துப்போவதன்றி அவ்வளவு மிகுதியாகவும் இருப்பதில்லை; இப்படிக் கிரமமாகக் குறைந்து, நீர்தாழ்ந்த பூமிகளாகிய கீழ்வங்காளம், பர்மா ஆகியவிடங்களில் ஆடுமாடுகள் மிக அருமையாகின்றன; அவற்றிற்கு ஈரப்பூமி ஒத்துக்கொள்வதில்லை; அவ்விடங்களில் எருமைகள் மட்டு மிருக்கின்றன.

கோதுமை:— இஃது ஐரோப்பியப் பயிர். இத்தேசத்தில் வடக்கிலும் மேற்கிலும் மாத்திரம் பயிராகின்றது; பஞ்சாப்பில்

மிருதி; இங்குச் சாகுபடிநிலத்தின் மூன்றிலொருபாகம் கோதுமைப் பயிரே; அயோத்தியா முதலான ஐக்கியமாகாணங்களிற் கோதுமை பயிராகும் நிலம் அதிகமாகவிருக்கினும் பஞ்சாப்பைப்போல் அவ்வளவு இல்லை. மத்தியமாகாணங்களிற் காற்பங்குநிலம் கோதுமை பயிராகின்றது; பம்பாயிலும் ஸிந்துதேசத்திலும் பத்திலொருபங்கு நிலம்; பீகார் (விஹாரபுரம்) என்னும் விராடராச்சியத்திலும், கங்கை நதிக்குத் தென்புறமாயுள்ள வங்காளத்து ஜில்லாக்களிலுங்கூடக் கோதுமை விளைகின்றது. அமெரிக்கா கண்டத்து ஐக்கிய மாகாணங்களிலெவ்வளவு நிலத்திற் கோதுமை பயிராகின்றதோ அவ்வளவு நிலத்தில் இந்தியாவிலும் பயிராகின்றது.

நெல்:—முக்கியமாக இந்தியாவின் மேற்குக்கரையிலும் பெரிய நதிகளின் முகத்துவாரங்களையடுத்த நிலங்களிலும் பயிராகின்றது. பர்மாதேசத்துத் தென்புறத்துப்பள்ளத்தாக்குக்களிலுள்ள விவசாய நிலங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபங்கு நெற்பயிரே; வங்காளத்திலும் விசேஷம்; ஆஸாம், ஒரிஸ்ஸா தேசங்களிலும், கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணை, காவேரியாகிய இந்நதிகள் பாயுமிடங்களிலும், திருவாங்கூர், மலையாளம், கனடா, கொங்கணம் ஆகிய இத்தேசங்களின் பள்ளத்தாக்குக்களிலும் நெற்பயிரே முக்கியமான விளைவு; அயோத்தியா ஐக்கியமாகாணங்களில் விவசாயத்திற்குள்ளான நிலத்தில் ஆறிலொருபங்கு நெற்பயிர்; இந்தியாவின் மற்றைப்பாகங்களில் நெல் அவ்வளவு விசேஷமானதன்று; ஆயினும், சாத்தியமானவிடங்களிலெல்லாம் நெல் பயிர்செய்கின்றார்கள்.

பர்மா அரிசி பழுப்புநிறமானது, பருமனானது; ஆண்டுக்கு ஒருபோகமே விளையும்; ஏகராவுக்குச் சராசரி 25 முதல் 30 மணங்காகும்; அதனைவிட வங்காளத்து அரிசி மேன்மையானது. இது சராசரி 15 மணங்கு காணும்; வங்காளத்திலிருந்து ஏற்றுமதியாவது புழுக்கின நெல்; புழுக்குவதினால் நெல் முளையாதிருப்பதன்றி உமியுமெளிதிலகலும். பட்னா (பாடலிபுரத்து) அரிசி ஐரோப்பாவில் மிக்க மதிப்புப்பெற்றது; அரிசி சிறியமணியாய் வெண்ணிறமாகவிருக்கும். தென் இந்தியாவில் நெல்லூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இந்த ஜில்லாக்களில் நேர்த்தியான நெல் விளைகின்றது.

எண்ணெய் வித்துக்கள்:—இந்தியாவில் எங்கும் உண்டு; கங்கைநதிக்கரையிலும் பிரம்மபுத்திராநதிக்கரையிலும் மற்றைப்பயிர்களோடு கலப்பாக இடையிடையே இவற்றைப்பயிரிடுகிறார்கள்; வங்காளத்திலும் வடமேற்கிலும் முக்கியமானவை கடுகு, எள்ளு, ஆளிவிதை, குஸும்பா, ஆமணக்கு, நிலக்கடலை; மஞ்சக்குப்பம் ஜில்லாவில் நிலக்கடலை.

கரும்பு:—தேசமெங்கும் விளைகின்றது. அயோத்தியா ஐக்கிய மாகாணங்களி லதிகம்; தென்னிந்தியாவிற் பனஞ்சாற்றினால் சர்க்கரை செய்கிறார்கள்.

காபி:—தென்னிந்தியாவில் மாத்திரம் உண்டு; முக்கியமான இடம் கனடா முதல் திருவாங்கூர் வரையிலுள்ள மேற்குக்கணவாயின் மேற்சரிவு; சேவராயமலையிலும் பழனிமலையிலும் விளைகின்றது. மகம்மதியமதத்தை யவலம்பித்த மலையாளியொருவன் மெக்காவுக்கு யாத்திரைபோய்த் திரும்பிவரும்பொழுது கொண்டுவந்து முதன்முதல் இந்தியாவிற் பயிராக்கினான்; பின்னர் ஆங்கிலேய முதலாளிகள் அபிவிருத்தி செய்தார்கள்.

தேயிலை:—ஆஸாம் தேசத்தில் அபரிமிதமாக விளைகின்றது; முதன்முதல்பயிரானது அவ்விடத்திலேயே; பின்னர், காச்சார், டார்ஜீலிங், (துர்ஜயலிங்கம்) சிட்டகாங், நீலகிரி, சோட்டாநாகப்பூர், பூதான், அரக்கான், திருவாங்கூர் ஆகிய இவ்விடங்களிற் பயிராக்கப்பட்டது; ஆஸாமில் 200,000 ஏகரா பூமியில் இது பயிராகின்றது.

அவுரி:—இன்னும் ஐரோப்பிய முதலாளிகளே விசேஷமாகப் பணச்செலவுசெய்து பயிர் செய்விக்கிறார்கள். வங்காளம், வடமேற்கு ஐக்கியமாகாணங்கள், பஞ்சாப், சென்னைராஜதானியில் கிருஷ்ணாவுக்கும் வடஆர்க்காட்டுக்கும் இடையிலுள்ள நாடு, கடப்பைஜில்லா, கர்னூல் ஜில்லா—ஆகிய இவை முதலான இடங்களிற் பயிராகின்றது. கல்கத்தாவிலிருந்து ஏற்றுமதியாகும் நீலிமருந்து பெரும்பான்மையும் பீகார்மாகாணத்து வடபாகத்தில் உற்பத்தியாகின்றது.

பருத்தி:—இந்தியாவில் எங்கும் பயிராகின்றது; இஃதொரு முக்கியமான பயிர்; குடகு (கூர்க்) ராச்சியத்திற் பருத்தி விளைவ

தில்லை; அயோத்தியா, மத்திய மாகாணங்கள், பர்மாவின் தென்பாகம், ஆஸாம் ஆகிய இவ் விடங்களில் மிகக்கொஞ்சம். விசேஷமாகப் பருத்தி விளையும் நாடுகளாவன.—குஜராத் (கூர்ஜரம்) முதல் காத்தியாவாட் வரையிலுள்ள சமபூமி, தக்ஷிணத்து மேட்டுப்பூமி, மத்திய மாகாணங்களிலும் பிராரிலுமுள்ள பள்ளத்தாக்குக்கள், பல்லாரி, கர்னூல், கிருஷ்ணாவிலும் திருநெல்வேலியிலுமுள்ள பள்ள நிலங்கள். இஃது இந்தியாவிலேயே உற்பத்தியான செடி; ஆதிமுதல் இத்தேசத்தாருக்கு வேண்டிய அளவு பருத்தி இங்கேயே விளைந்துவருகிறது; ஆனால் இந்தியப்பருத்தியின் தொடர்நுனி நீளமாகவராதகனால் அமெரிக்கா கண்டத்துப் பருத்திவிதையை இங்குப் பயிரிடத் தொடங்கினார்கள்; இந்த அமெரிக்கா பஞ்சு பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த தார்வாடா ஜில்லாவில் மாத்திரம் நன்றாகப் பயிராகின்றது.

சணல்:—பருத்திக்கு இரண்டாவதான நார்ப்பயிர் சணல் ஆகும்; இது வங்காளத்தில் மாத்திரம் உண்டாகின்றது; கங்கையின் வடகரைமுதல் பிரம்மபுத்திரா நதியின் கீழ்க்கரைவரையிலுள்ள பூமியிலும், பூர்ணியாவுக்கும் கோவால்பாராவுக்கும் இடையிலுள்ள பூமியிலும் பயிராகின்றது; சென்னை ராஜதானியிற் பாலக்கொண்ட, பிமிலிபட்டணம், சிட்டிவால்ஸா என்னுமிடங்களிற் பயிராகின்றது. இதனைப் பயிர்செய்வதற்கும் நார் எடுப்பதற்கும் விசேஷமான பணச்செலவில்லை; கயிறு, துணி, காகிதம் செய்யலாம். இந்தத்துணியே கோணிப்பையென வழங்குவது.

அபினி:—ஏற்றுமதிக்கு இதை இரண்டே இடத்திற் பயிராக்குகிறார்கள்:—1. பட்னாவையும் பனாரிஸையும் சூழ்ந்துள்ள கங்கைப் பள்ளத்தாக்கு, 2. பூர்வத்து மாளவராஜ்யமான மத்திய இந்தியாவிலுள்ள பீடபூமி (இப்பொழுது இந்தியச்சிற்றரசரது ஆளுகையிலிருக்கிறது); வங்காளத்தில் இந்தப் பயிர் ஆங்கிலத் துரைத்தனத்தாரது கையிலிருக்கிறது; பட்னாவிலும் காஜிப்பூரிலும் மாத்திரம் விளைகிறது; வங்காளத்திலுண்டாகிற அவ்வளவு மாளவாவிலுமுண்டாகிறது.

புகையிலை:—ஆங்காங்கு உபயோகத்திற்காக இந்தியாவில் எங்கும் கொல்லைகளிற் பயிர் செய்யப்படுகின்றது. வியாபாரத்திற்காக

வங்காளத்திலுள்ள ரங்கப்பூரிலும், டிரஹூட்டிலும், பம்பாயி லுள்ள கைராவிலும், சென்னையிலுள்ள கோதாவரிக் கழிமுகக் கரையிலும், கோயமுத்தூர், மதுரையென்னும் இரண்டு ஜில்லாக்களி லும் பயிர்செய்யப்படுகின்றது ; இதனைப் பதப்படுத்துவதற்கு மிகு ந்த சாமர்த்தியம்வேண்டும்; இந்தியத்தொழிலாளிகள் திறமையுடன் வேலைசெய்யாததனால் ஐரோப்பாவில் வழங்கும் அமெரிக்காகண்டத் துப் புகையிலையுடன் போட்டிபோடமுடியாமலிருக்கிறது. ஐரோப் பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் புகையிலை பதனிடுவதில் தேர்ந்தவர்களை வைத்து இப்போது இங்குப் பதனிட்டு வருவத னாற் சிறிது சிறிதாக இந்தியப் புகையிலை ஐரோப்பாவில் ஏற்கின் றது. இனி மேன்மேலும் அதிகமாக ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி யாகக்கூடிய புகையிலை நமது நாட்டிற் செய்யப்படுமென்று நம்புகி றோம்.

ஸின்கோனா:—நீலகிரிமலைகள், குடகுநாடு, திருவாங்கூர் ஸம் ஸ்தானம், இமாலயபர்வதத்தின் கீழ்த்திசைப் பாகம் (முக்கியமாக டார்ஜீலிங்) ஆகிய இடங்களிற் பயிர்செய்யப்படுகின்றது. இதன் பட்டையிலிருந்து 'க்வினைன்' (க்வைனா) என்னும் ஜ்வரஹரிமருந்து செய்யப்படுகின்றது.

பட்டு:—இஃது இந்தியாவில் அபிவிருத்தியாகாமலிருப்பதைப் பற்றிச் சிந்திக்கவேண்டியிருக்கிறது; ஆனால் உள்ளது குறைந்துபோ கவில்லையென்று சொல்லலாம்; வங்காளத்திலுஞ் சென்னையிலும் இதனை வளர்ப்பதற்கும் வர்த்தகச்சங்கத்தவர்களும் துரைத்தனத் தாரும் முயன்று வருகிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் இங் கிருந்து ஏற்றுமதியாகும் பட்டைவிட வெளியூர்களிலிருந்து இறக்கு மதியாகும் பட்டு அதிகமாகவிருக்கின்றது. பட்டுப்பூச்சிக்கு அவசிய மான முசுக்கட்டைச் செடியானது கீழ்வங்காளத்து ஜில்லாக்க ளான ராஜஷாஹி, பர்ட்வான் என்னும் இடங்களில் மாத்திரம் வளர் கின்றது. மைசூர்நாட்டிற் சிலவிடங்களிற் பட்டுப்பூச்சி வளர்த்துப் பட்டு நூலெடுத்து வேலைசெய்து வருகின்றார்கள். சிக்கபள்ளா புரத்தில் அதிகமாக இருக்கிறது. நமது நாட்டிலுள்ள பட்டுநூற்கா ரர் எனப்படுவோர் இந்த வியாபாரத்தை மேற்கொண்டு அபிவிருத்தி

செய்வார்களாக. (டாஸ்ஸர்) பட்டு என்பது வேறுவகைப் பூச்சியின லுண்டாவது. இதன் இறலிக்கூடுகள் காடுகளில் அகப்படுகின்றன; இந்தநூல் பட்டைப்போலவேயிருக்கின்றது. இதனல் நார்மடி முதலியன செய்து இந்தியாவில் உபயோகிக்கிறார்களேயொழிய வெளித் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யத்தக்கவாறு நூலேயிழைத்து நெய்வது கஷ்டமாக இருக்கின்றது; வருஷத்திற்கு மூன்றுதடவையே, ஆகஸ்டு, நவம்பர் மாதங்களில் 'டாஸ்ஸர்' பட்டு எடுக்கலாம்; கடைசியிலெடுப்பது நல்ல பட்டாக இருக்கின்றது.

அரக்கு:—இஃது ஒருவகைப் பூச்சியினுலுண்டாகும் செம்மெழுகு; எங்கும் கிடைக்கும்; காட்டுச்சாதியார் பொறுக்கிச் சேர்க்கிறார்கள். சோட்டாநாகப்பூர், ஆஸாம், மீர்ஸாபூர் என்னுமிடங்களிலிருந்து கல்கத்தாவுக் கனுப்பப்படுகின்றது. அங்கிருந்து வெளித் தேசங்கட்கு ஏற்றுமதியாகின்றது; இது சாயத்திற்கும் மெருகெண்ணெய் செய்வதற்கு முபயோகப்படுகின்றது.

MINERAL PRODUCTIONS

தாதுவர்க்க விளைவுகள்

லோஹவர்க்கங்கள் விளைவதற் காதாரங்கள் இந்தியாவில் நிரம்ப இருக்கின்றனவென்பது உண்மை. பாடுபட்டுழைக்காத குற்றத்தினல் அவைக ளிருக்குமிடந் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. அனாதிகாலமாக இந்தியர்கள் லோஹங்களில் வேலைசெய்து சாமான்கள் முதலியன செய்வதிற் கைதேர்ந்தவர்கள். பண்டைநாளில் இவர்கள்உபயோகியாதது நிலக்கரி ஒன்றேயாம். இவர்களெடுத்துக் கையாளாத லோஹம் வேறெதுவுங் காணேம். விசேஷமாகச் சுரங்கங்கள் வெட்டி வேலைசெய்யாததனல் இந்தியாவிலுள்ள லோஹச் செழிப்பு இத்தன்மையதென்று கண்டறியக்கூடவில்லை. இப்பொழுது நவீனமாக ஆங்கிலேய துரைத்தனத்தாரால் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பது 'அலுமினியம்' என்னும் படிக்கார ஸத்து ஒன்றேயாகும்.

இரும்பு:—மலைகளுள்ள இடங்களிலெல்லாம் இரும்பு அகப்படுகின்றது. அனுகூலத்திற்குத்தக்கபடி கொஞ்சமாகவாவது அதிகமாக

வாவது வேலைகளுஞ் செய்யப்படுகின்றன. தக்க இரும்புவேலை செய்யும் பட்டடைகள் ஏற்படுவதற்கு இப்பொழுது போதுமான அனுகூலங்களில்லை. முக்கியமான கஷ்டமாவது இரும்புச்சன்னங்கள் அகப்படுமிடங்களில் அவற்றையுருக்கி இரும்பாக்குவதற்கு வேண்டிய நிலக்கரி அகப்படுவதில்லை; சமீபத்திலுங் கிடைப்பதில்லை; ஆயினும், ரெயில்வண்டிகள் அதிகரித்திருக்கின்றமையின் நிலக்கரியைத் தேவையான இடங்களுக்குச் சொற்பச் செலவிற் கொண்டு போகக்கூடுமாதலின் இரும்புப் பட்டடைக ளாங்காங்கு ஏற்பட்டுச் செழிக்குமென்று நம்புகிறேம்.

நிலக்கரி:—ஏறக்குறைய நூற்றுமுப்பது வருஷங்களாக இந்தியாவில் நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகின்றது; 1881-இல் 58 நிலக்கரிக் கனிகள் இருந்தன; இவற்றிலிருந்து வருஷத்திற்கு ஒருகோடிடன் நிறையுள்ள கரி எடுக்கப்பட்டுவந்தது; இந்தவேலை ரெயில்வே கம்பெனிகளைப் பொறுத்திருக்கின்றது; அவைகளுக்கு நிலக்கரி விசேஷச்செலவிருப்பதன்றி அவையில்லாவிடின் கனிகளினின்று தூரமான இடங்களுக்கு நிலக்கரியைச் சுலபமாகக்கொண்டுபோக முடியாது; பெரிய நிலக்கரிச் சுரங்கம் பர்ட்வானிலுள்ள ராணிகஞ்ஜ் என்னும் பட்டணத்திலிருக்கின்றது. அங்கு ஈஸ்ட் இண்டியன் ரெயில்வே ஓடுகின்றது. மத்திய மாகாணங்களில் இரண்டு நிலக்கரிக் கனிகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து எடுக்கப்படும் கரி கிரேட் இண்டியன் பெனின்ஸுலா ரெயில்வேக்குஉபயோகப்படுகின்றது; அவை வாரோரா என்னும் இடத்திலொன்றும் மோஹ்பேன் என்னும் இடத்திலொன்றும் ஆக இரண்டு கனிகளிருக்கின்றன. கல்கத்தாவில் உபயோகிக்கப்படும் நிலக்கரியில் முக்காலேவீசம்வாசி இந்தியாவில் விளையுங்கரியே. தெலுங் குஜில்லாக்களிலுள்ள சிங்கரேணி என்னும் ஊரில் நல்ல நிலக்கரிச்சுரங்கங்கள் இருக்கின்றன. அங்கிருந்து பெஜவாடா வழியாகச் சென்னைக்கு நிலக்கரி வரும். மதராஸிலும் பம்பாயிலும் ஆங்கிலத்திலிருந்து நிலக்கரி வரவழைத்து உபயோகிப்பதே வழக்கமாக இருக்கின்றது. இனியாவது இது மட்டுப்படுமென்று நம்புகிறேம். இந்தியநிலக்கரியிற் சாம்பல் அதிகமாக விழுகின்றதாம். 135-பவுன் வாரோரா நிலக்கரி உபயோகிக்குமிடத்து, 100-பவுன் ஆங்கிலக்கரி உபயோகித்தாற் போதுமாம்.

(இன்னும் வரும்)

தேசசஞ்சாரி.

உ

ஆசார விளக்கம்

(௩௦௩-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அசுத்தமான ஜலத்தை உபயோகிக்கவேண்டிவருமாகையாற் சாஸ்திரங்களிற் சுத்திகரணமுறைகள் கூறப்பட்டிருக்கின்றன. நதியின் விஷயத்தில், அதன் நீர் "ஓட்டத்தினாற் சுத்தமாகின்றது" என்று கொண்டிருக்கிறார்கள். இஃது இக்காலத்துச் சுகாதார சாஸ்திர ஆராய்ச்சிக்கும் விஷப்புழுசாஸ்திர ஆராய்ச்சிக்கும் ஒத்திருக்கின்றது. ஆனால் இக்காலத்து இந்துக்கள் இவ் விதியை விபரீதமாக அருத்தப்படுத்திக்கொள்வதனாற் பெருந்துன்பம் விளைகின்றது. ஆற்றுநீரின் சுத்தத்தைப்பற்றி மேற்சொல்லிய சித்தாந்தம் உண்மையானதே என்பதை எவரும் மறுத்துச்சொல்லார். ஆயினுங் கல்வித்தேர்ச்சியில்லாத இந்துக்களிற் பெரும்பாலார் ஓடுந்தண்ணீரை மிகக் கோரமாக அசுத்தப் படுத்துவதற்கு மேற்சொல்லிய சித்தாந்தத்தையே ஆதாரமாக எடுத்துரைக்கிறார்கள். வழக்கச்சொல்லில் அந்த விதிவாக்கியமானது "ஓடும் நீர் சுத்தமானது" என்று மருவிப்போயிற்று. தவறான இந்தக்கருத்தை மனத்திற்கொண்டு, நீரெடுக்குமிடத்திற்கு அடுத்து மேலேயிருந்து ஊர்வண்ணார்கள் பலவகைச் சாதியாருடைய உடம்புகளிலிருந்து திரட்டியெடுத்த அழுக்கைக் கழுவியனுப்புகிறார்களென்று நன்றாகத் தெரிந்திருந்தும், ஆசார மிகுந்த பிராமணனுங் கூசாமல் நீரெடுத்துச் செல்கிறான். தண்ணீர் தன் ஓட்டத்தினாற் சுத்தப்படுவது உண்மையே; ஆனால், இருபது மைல் முப்பது மைல் அல்லது இன்னும் அதிகமாக ஓடினாலன்றி அது சுத்தப்படாதென்றும், "ஓடுகிறது" என்னும் மாத்திரத்தினாலேயே தண்ணீர் சுத்தப்பட்டதாகச் சாஸ்திரங்கள் கூறவில்லையென்றும், தினந்தோறும் அழுக்குநீரெடுத்து உபயோகிக்கும் அந்தணன் நினைத்துப் பார்க்கவேண்டும். ஒரு காரணம் எடுத்துக்காட்டுவோம். வருண வித்தியாசமின்றி மனிதர்களுடைய வாந்தியிலிருந்தும் மலஜலங்களிலிருந்தும் விஷபேதியை உண்டாக்கத்

தக்க நுண்ணிய புழுக்கள் பிறக்கக் கூடும். இப்படிப்பட்ட புழுக்கள் காவேரிநதியிற் சேர்ந்து ஆற்றுநீர் சுத்தப்படுமுன் பதினெட்டு மைல்தூரம் ஓடிப் பரவலாமென்பது நிச்சயம்.

இதுவரையில் எடுத்து உதகரிக்கப்பட்ட விதிவிலக்குகள் விஷ்ணுஸ்மிருதியிலிருந்தும் மனுதர்ம சாஸ்திரத்திலிருந்தும் எடுக்கப்பட்டனவாகும். எனக்குச் சமஸ்கிருதமும், அரபி பாஷையும் தெரியாததனால் அந்தப் பாஷைகளிலிருந்து மொழிபெயர்க்கப்படாத கிரந்தங்களினின்று இனி எடுத்துரைக்கப்படும் மேற்கோள்களை எனது நண்பர்கள் அப்போதைக்கப்போது அன்புடன் எனக்குச் சேகரித்துக்கொடுத்தனர்.

இயற்கையிற் காய்ச்சி வடிக்கப்பட்டதே மிகவுஞ் சுத்தமான நீரென்றும், அது மழைநீரென்றும், அதனை அசுத்தமாக்கத்தக்க பொருளில்லாத வனத்திற் பிடித்துவைக்கவேண்டுமென்றும் அஷ்டாங்கஹிருதயம் எனுங் கிரந்தம் கூறுகின்றது. வெள்ளிப்பாத்திரம் அல்லது பொற்பாத்திரத்திற் பிடித்து வைப்பது உத்தமம். அஃது இல்லாவிடிற்சுத்தமான கெட்டித்தரையில் மழைநீரைப் பிடித்து வைக்கலாம். இப்படித் தரையிற் பிடித்துவைக்குமிடத்து அந்தத் தரையின் மீதும் ஜலத்தின் மீதும் தாராளமாக வெயிலுங்காற்றும் அடிக்கவேண்டும். மண், தூசி, பூச்சி, அழுக்கு அல்லது இலை தழைகள் ஆகிய இவற்றினால் அசுத்தப்பட்ட நீரையும், வெயில், நிலவு, காற்று ஆகிய இவை படாத நீரையுங் குடிக்கலாகாதென்று மேற்கூறிய கிரந்தம் விசேஷ விதியாகக் குறிக்கின்றது. பூச்சி புழுக்களினால் அசுத்தப்படுத்தப்பட்ட நீரைக் குடிக்கக்கூடாதென்று சொன்னதனாற் கொசுகு மொய்த்த நீருங் குடிக்கத்தக்கதாகாது. யானைக்கால், விஷசுரம் முதலான ரோகங்களுக்குக் கொசுகு காரணமாதலின் இந்த விதியை முக்கியமாகக் கவனிக்கவேண்டியது. தரையின்மீது வழிந்தோடும் தண்ணீரைப்பிடித்துவைத்தவுடன் குடிக்கக்கூடாதென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. அது புதிதாகப்பிடித்துவைக்கப்பட்டதென்பது அதனுட்காணும் நுரையினால் விளங்கும்.

அந்தத் தண்ணீரைக் குடிக்கவேண்டிய அவசியம் ஏற்படுமாயின் மூன்று நாளாவது அதன்மீது வெயிலுங் காற்றும் அடிக்கவிட்டுப் பிறகு குடிக்கலாமென்று சொல்லுகிறார்கள். இந்த விதி ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமானது. ஏனென்றால், நதியில் முதன்முதலில் வரும் பிரவாகத்தில் ஜீவாங்கவஸ்துக்கள் (புல் பூண்டு முதலியன) கலந்தோடிவரக்கூடுமென்றும், ஜனப்பிரதேசத்தில் வரும் வெள்ளத்தில் ரோககாரகமான நுண்ணிய புழுக்கள் ஏராளமாகக் கலக்குமென்றுந் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்திற் கட்டப்படும் நீராசயங்களிலும் பொது நீர்நிலையங்களிலும் கூடுமானவரையில் அப்படிப்பட்ட தண்ணீரைத் தவிர்க்கிறார்கள். வெயிலுங் காற்றும் நன்றாக அடிக்கவேண்டுமென்று மேலே கூறியது வெளிப்பிரதேசமான தரையின்மீது ஓடி வரும் மழைநீரைக் கட்டிவைத்திருப்பதற்கு மாத்திரமேயன்றிக் கிணற்று நீருக்குச் சொல்லப்பட்டதன்று; மழைநீர்த்தேக்கங்களாவன, நதி நீரும் குளத்துநீருமாம். இந்த முக்கியமான விதியையும் இக்காலத்து இந்துக்கள் விபரீதமாக அருத்தஞ்செய்கிறார்கள். எந்த நீரும் வெயில் படுமாறு திறந்திருக்கவேண்டுமென்று கொள்கிறார்கள். இதனால், கிணறுகளை மூடிவைக்கக் கூடாதென்கிறார்கள்; கிணறுகள் திறந்திருப்பதனால் அவற்றின் நீர் கெடுவதற்கு இடமுண்டாகின்றது.

ஆரியர்கள் மேற்சொல்லிய விதியைப் பூர்வத்தில் ஏற்படுத்திய சந்தர்ப்பத்தைக் கவனிக்குமிடத்து அவர்கள் சூக்ஷ்மபுத்தியுடைய ஞானிகளென்று நாம் நமது ஆரோக்கிய சாஸ்திரப்பயிற்சியினாலும் பூச்சிகளினாலுண்டாகும் ரோகவாராய்ச்சியினாலுந் திடமாகச்சொல்லலாம். தரையின்மீதோடுந் தண்ணீரை ஜலாசயங்களில் தேக்கிவைத்துப் பாதுகாப்பதனால் ஜீவாங்கங்களின் சம்பந்தத்தினாலும் புழுப் பூச்சிகளின் சம்பந்தத்தினாலும் உண்டாகிய அசுத்தம் பெரும்பான்மை நீங்குகிறதென்று இக்காலத்திற்கண்டறிந்திருக்கிறோம். இதன் காரணம் என்னவெனின், நீரைத்தேக்கி வைப்பதனால் அதிலுள்ள வண்டல் அடியிற் படிகின்றது. தரையின் மேற்புறத்தில் ஜீவாங்க வஸ்துக்களோடு வழிந்தோடி வரும் ரோக

ஜனகக் கிருமிகள் 'ஆக்ஸிஜன்' என்னும் பிராணவாயு மிகுந்திருக்குமிடத்து பஸ்மமாகின்றன. நீர்நிலையின் ஆழத்திற்சிறிதுதூரம் மட்டும் வெயிலின் வேகம் தாக்குவதனால் ரோகஜனகமான கிருமிகள் மாள்கின்றன; இவ்வாறு அவை அற்றுப்போகின்றன. கிணற்று நீரின் விஷயத்திலோவெனின், அதன் சந்தர்ப்பங்கள் வேறு வகைப்படும். கிணற்றுநீரைத்திறந்துவைப்பதனால் அது மலினப்படுகின்றதென்று கண்டிருக்கிறோம். இதிற் சுத்தமான கீழ்த்தரையிலிருந்து சேகரிக்கப்பட்ட நீரானது பூச்சி புழுக்களில்லாததாகவும் நிலைமை மாறுந்தன்மையுள்ள ஜீவாங்கவஸ்துக்களில்லாததாகவும் இருக்கவேண்டும்; அவைகளை முற்றிலும் போக்கமுடியாவிடினுங் கூடியவரையில் இல்லாமற்செய்யவேண்டும். கிணற்றுநீரைத் திறந்து வைப்பதனால் அதனுட் பூச்சி புழுக்கள் வந்துசேருவதற்கும் அசுத்தமாக்கத்தக்க பதார்த்தங்கள் விழுவதற்கும் இடமுண்டாகின்றது.

நிலத்திற்குட் சூரியவெளிச்சமே படாமலிருக்குங் கீழ்த்தரையிலுள்ள நீரைச் சுத்தமாக எடுத்து உபயோகிப்பதற்கு உத்தமமான சாதனம் நார்ட்டன் என்பவர் செய்துள்ள குழற்கிணறாகும். அந்தக் குழலினுற் றரையின்கீழ் நீரிருக்குமிடத்திலிருந்து சூரியவெளிச்சம் படாமல் இருட்டிலேயே நீரை நேரேயெடுத்து வெளியேற்றலாம். நீரைச் சுத்திகரிப்பதற்குப் பூர்வத்து ஆரியர்கள் நன்கு கண்டறிந்த இன்னுமொருமுறையையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையே உத்தமமானதென்று இக்காலத்து அமெரிக்கா தேசத்துக் கிரந்தகர்த்தர்கள் பொதுநீர்நிலையங்களின் விஷயத்தில் வற்புறுத்துகிறார்கள். அந்த முறையாவது: நீரை நன்றாகச் சிதறவடித்து அது தாராளமாக வாயுவுடன் சம்பந்தப்படுவதனால் ஆக்ஸிஜன் என்னும் பிராணவாயுவை யேற்றுக்கொள்ளுமாறு செய்வதாம். இமாலய பர்வதத்திலிருந்து ஓடி வரும் நதிகள் சுத்தமாக இருப்பதற்கு இதுவே காரணமென்று அஷ்டாங்கஹிருதயம் என்னுங் கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நதிகளின் மூலத்தில் நீரானது கற்பாறைகள்தோறும் மோதுண்டு சிதறுவதனால் வாயுப்பிரசாரமதிகரித்துப் பிராணவாயுவுடன் கலந்துவருகின்றது. தரையின் மேற்புறத்து நீரைத் தேக்கிவைப்பதனால் உண்டாகும் நன்மையை

எடுத்துரைக்க, கடந்த மாரிகாலத்து நீர்த்தேக்கத்தினுற் குளங்குட்டைகளிற் படிந்திருக்கும் வண்டல்கள் மேன்மேலும் புதியவண்டல்கள் படிந்து அதிகரிக்கவிடுவது கூடாதென்று வைத்தியநூற்புலவரான சரகர் கண்டித்திருக்கிறுர். ஒரு வருஷருதுபோய் மற்றொரு வருஷருது வருவதற்குள் சிறிதுகாலம் ஆழமில்லாத சிறுகுட்டைகளாக நிற்கும் சிறிய ஏரிகளும் குளங்களும் மனிதர்களுடைய உபயோகத்திற்குத் தகுதியானவையல்லவென்று அவர் எச்சரித்திருக்கிறுர். இது நல்ல யுத்திவாதமென்பதற்கையமில்லை. ஏனெனின், வண்டல் அதிகரித்து நீர் அதிகமாகக் கெடுவதற்கு இடமாவதன்றி, நீரோட்டமில்லாத அப்படிப்பட்ட குட்டைகளில் துர்க்கந்தம் வீசும் புழுக்கள் பெருகிவளர்ந்து புதிதாக வரும் வெள்ளத்தையுங்கெடுத்து அந்தப் புதுநீரில் மேன்மேலும் அபிவிருத்தியடையும்.

செயற்கையினுல் ஜலத்தைச் சுத்தப்படுத்தும் முறைகளுள் தேத்தாங்கொட்டையைப்பற்றிச் சொல்லியிருப்பதன்றி நீரில் மிதந்து நிற்கும்வஸ்துக்களை அகற்றுவதற்காகத்துணியினுல்வடிகட்டிப்பிறகு நீரை வெயிலில் வைக்கவேண்டுமென்றுங் கடைசியில் இரும்பைப் பழுக்கக்காய்ச்சி அதனுள் தோய்க்கவேண்டுமென்றுஞ்சொல்லியிருக்கிறுர்கள். ஆதலின், நீரைக்கொதிப்பித்து அதிலுள்ள ரோகஜனகக் கிருமிகளை நசிக்கச்செய்வது முக்கியமான காரியமென முற்காலத்தவர் கொண்டிருந்தார்களென்பது விளங்குகின்றது. உடம்பு அசௌக்கியப்பட்டகாலத்து முக்கியமாகச் சுரம்வந்த காலத்துங், கொதிக்க வைத்த வெந்நீரையே உபயோகப்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறுர்கள். பாலக்காட்டுக்குச் சமீபத்தில் விஷக்காற்று வீசும் மலைநாட்டிலுள்ளவர்கள் ஆரோக்கியமான ஜலத்தைத் தெரிந்தெடுத்து அதைத்தவிர வேறெந்த ஜலத்தையும் உபயோகியாமலிருப்பதன்றி அப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல ஜலத்தையுங் காய்ச்சிக் குடிக்கிறுர்கள். அப்படிச் செய்வதனுல், அவர்களுக்கு அந்நாடுகளில் சகஜமாக இருக்கும் விஷசுரம் வருவதில்லையென்று அறிகிறேம். இவ்வாறு ஆரோக்கியமான ஜலத்தைத் தெரிந்தெடுப்பதும் அதைக் காய்ச்சிக் குடிப்பதும் அவர்களுக்குப் பரம்பரையாக ஏற்பட்டிருக்கிறது; இக்காலத்தவர் அந்த முறைப்படியே

நடப்பது அவசியமென்றும் அதனால் விஷசுரத்திற் குள்ளாகாமலி ருக்கலாமென்றும், தங்களுடைய சொந்த அனுபவத்தினால் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சில வியாதிகள் தண்ணீரைக் கொதிப்பித்து ஆற்றிக்குடிப்பதனால் குணப்படுகின்றனவென்று சவன்சாதிகுணகல் பகம் என்னுங் கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால், அப் படிக்காய்ச்சி ஆற்றிய நீரை இரவில் தங்கவைத்திருக்கக் கூடாதென் றும், நாட்படுமாயின் அந்நீர் கெட்டுப்போமென்றும் அதேகிரந் தங் கூறுகின்றது. நீர் கொதித்து ஆறினபிறகு நெடுங்காலம் வைத் திருந்தால் அதனுள் ரோகஜனகக் கிருமிகள் உண்டாகுமென்பது கருத்து. இக்காலத்தில் நம்மவர் இவ்விதியை வெகுவாக மறந்து விடுகிறார்கள்.

தேகாரோக்கிய சாதனையில் முக்கியமானவிஷயம் கசுமலங்க ளைச் சரிவரக் களைந்து அப்புறப்படுத்துவதாம்; அதுவே பெரியகா ரியம்; மனிதனுடைய தேகத்திலிருந்து வெளிப்படுவன கசுமலங்க ளாகும்; அந்த ஆபாசங்களினின்று காத்துக்கொள்வதே முக்கிய மான ஆரோக்கிய சாதனம். மனிதனுக்கு அவனுடைய தேகத்தி லிருந்து வெளியாகுங் கசுமலங்களே மிருத்தியுவாகும்; அப்படி யே, சிற்றுடலுடைய புழுவுக்கும் அதன் கசுமலங்களே அதைக் கொல்லும். கசுமலங்களைச் சாக்கிரதையாக அகற்றி அப்புறப் படுத்தத் தவறுவதனால் ரோககாரகக் கிருமிகளின் சேஷ்டை மிகவும் பலப்படுகின்றது. வேறுகாரணங்களினால் இவ்வளவு பிரபலப்படுவ தில்லை. முனிசிபல் சுகாதாரச் சட்டத்திற்கு இதுவே நெடுங்கணக்கு (அரிச்சுவடி) போன்ற மூலமாகும். ரோகத்திற்கு முதற்காரண மான இந்த விஷயத்தை இக்காலத்து முனிசிபல்சபையார் முக்கியமா கக் கவனியாமல் லக்ஷலக்ஷமாகப் பணச்செலவுசெய்யவேண்டிய ஜல வசதியையுஞ் சாக்கடைப் போக்கையும்பற்றி வெகுகம்பீரமாகத் தர்க்கிக்கிறார்களே. ஆரோக்கியத்திற்கு அவசியமானதாகவும் அற் பச் செலவில் நிறைவேற்றக்கூடியதாகவும் இருக்கிற விஷயத்தைக் கவனியாமல், அனவசியமாகவும் அதிகச்செலவு கொள்ளத்தக்கதாக வும் இருக்கிற காரியங்களைப்பற்றிப் பேச அவர்களுக்குக் காலம் கிடைக்கிறதே என்று விசனிக்கிறேன். மலஜலங்களை எவ்விடங்க

ளிற் கழிக்கலாம், எவ்விடங்களிற் கழிக்கக்கூடாதென்று முன்னோர் நிர்ணயித்துத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஜனங்களுக்கு உபயோகப்படுஞ் சலாதாரங்களுக்குச்சமீபமாக மலஜலங்களைக்கழிப்பதைப்பற்றிஇதுவரையிற்கொஞ்சம்எடுத்துச்சொல்லியிருக்கிறேன். அதைத்தவிர, சாலைகளிலும் வீதிகளிலும்ஜனங்கள்நடமாடுமிடங்களிலும் மலஜல விஸர்ஜனஞ் செய்யக்கூடாதென்று மனு விதித்திருக்கிறார்.

இந்தவிதி மிக உபயோகமானது. இந்தவிதியை மீறிநடப்பவருக்குத் தண்டனை மிகத் தகுதியானதாகவும் நியாயமானதாகவும் அவர் ஏற்படுத்தியிருக்கிறார். ஜனங்கள் நடமாடுமிடங்களில் மேற்சொன்ன விதியை மீறி மலஜலங்களைக் கழிப்பவன் அந்த இடத்தை அவனே சுத்திசெய்யவேண்டும்; மிகப் பிரயோஜனமான இந்தச்சட்டம் இக்காலத்தில் நடைபெறுதிருப்பது நிரம்பவும் விசனிக்கத்தக்கது. கசுமலங்களைக் களைவதற்கும் அழுக்கு நீரை அகற்றுவதற்கும் முனிசிபாலிடியார் இக் காலத்திற்செய்யும் முயற்சியை முன்னிட்டேபோலும், மனுவானவர்— "மூத்திர புரீஷங்களை (ஜலமலங்களை)க் குடியிருக்குமிடங்களுக்கு வெகுதூரத்தில் அகற்றக்கடவன்; கால்கழுவிய நீரையும் உடம்புகுளித்த நீரையுந் தூரத்திற்கொண்டுபோய் விடக்கடவன்"—என்று விதித்திருக்கிறார். அவர் மிகவும் உபயோகமான முனிசிபல்விதி மற்றொன்று ஏற்படுத்திருக்கிறார் அதை இம்மாகாணத்தவர் அனுஷ்டிக்காமலிருப்பது விசனிக்கத்தக்கது. அது கிராமங்களின் எல்லையோரங்களில் பொதுக்காரியங்களுக்காகக் கொஞ்சம் நிலத்தைத் தனியே வைத்திருப்பது அவசியமென்பதைக் குறித்துச்சொல்லிய விதியாகும். எப்படியெனில், "கிராமத்தின் நாற்புறத்திலும் நூறு 'தனுசு' கொண்ட நிலமும், பட்டணத்தைச்சுற்றி அதைவிட மூன்றுபங்கு (முன்னூறு 'தனுசு') வெளிநிலமும் ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்காகத் தனியே வைத்திருக்கவேண்டும்." இக் காலத்தில் தேகயாத்திரைசெய்வதற்குள்ள கஷ்டங்களை யுத்தேசிக்குமிடத்து, மனு சொல்லியபடி அவ்வளவு தாராளமாக மேய்ச்சற்றரை வைத்திருப்பது முடியாதெனினும், பயிரிடுங் குடியின் குடிசையின் வாசல்வரையில் நீர்பாய்ச்சிப் பயிர்

செய்யவேண்டுமென்று அவ்வளவு விபரீதமாக இக்காலத்து மிராசுதார்கள் ஆசைப்படவேண்டாமே.

வியாதியானது நுண்ணிய உருவுள்ள பூச்சிகளினாலுண்டாகின்றது. அஃதாவது, உயிருள்ள வஸ்துவொன்றிருக்கிறது; அதனால் வியாதியுண்டாகிப் பரவுகின்றது என்னும் சித்தாந்தத்தையனுசரித்தே ஆரியர்கள் சுகாதாரச்சட்டமேற்படுத்தியுள்ளார் என்று இதுவரையிலேயே சொல்லியிருக்கிறேன். அப்படியில்லையென்றால், பின்னர் எடுத்துரைக்கப்படும் சுத்தத்திற்காக ஏற்பட்ட பலவிதிகளுக்குங் காரணம் விளங்காது:—ஆரியன் "அன்னியருடைய குளங்களிற் குளிக்கலாகாது"—மலையாளத்தைத்தவிர இம்மாகாணத்து மற்றைப் பிரதேசங்களில் இந்தவிதி அனுஷ்டானத்திலில்லை; "தர்மசாஸ்திராசாணையில்லாத கிராமத்தில் அவன் வசிக்கலாகாது"—அஃதாவது, ஆரோக்கியாசாரங் குறைவுபட்டிருக்குங் கிராமத்திலென்பதாம்; "வியாதிகள் பரவியிருக்குமிடங்களில் அதிகமாகத் தாமசிக்கலாகாது." தொத்துவியாதிகளைத் தடுக்கும்பொருட்டு, "அன்னியருடைய பாதரக்ஷகள், ஆடைகள், பூணூல், ஆபரணங்கள், பூமாலை, பான பாத்திரம் ஆகிய இவைகளை" உபயோகிக்கக் கூடாதென்பதும், "பிணம் கிடக்கும் கிராமத்திலுஞ் சூத்திரர்களின் ஆசாரமேற்கொண்டு ஒழுகுகிறவனுக்குச்சமீபத்திலும்"—அஃதாவது, பிராமண நியமத்தின்படியின்றிஅனாசாரமாக ஜீவிக்கிறவர்களுக்குச் சமீபத்திலும்—தங்கலாகாதென்பதும், "ஜனங்களின் கூட்டத்தில் நிற்கக்கூடாது" என்பதும் அவசியமான விதிகளென்றே ஏற்படும். "சிராத்தங்"களுக்குப் பிராமணர்களை வரிப்பதில் நோயாளிகளையும் ஸூதகங்காப்போரையும் நியமிக்கக்கூடாதென்று விதியேற்படுத்தியிருக்கிறார்கள். க்ஷயரோகிகளை நியமிக்கக்கூடாதென்று அவர்கள் நிஷேதித்திருப்பதாகத் தோன்றுகிறது (எனக்குக்கிடைத்தமொழிபெயர்ப்புச்சரியானதாக இருக்குமென்று நம்புகிறேன்). இஃது இக்காலத்துச்சுகாதார சாஸ்திரத்திற்கு மேம்பட்டதாகும். இவ் விஷயமாக அமெரிக்கா தேசத்திலுள்ள நமது சோதரரான சாஸ்திரஜ்ஞர்கள் மிக்க கருத்துடன் வாதித்துள்ளார். வேதங்களை ஓதும் விஷயத்திலும் நல்லவிதியொன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். துர்நாற்றம் வீசுகிற கிராமத்தில் வேத

படனஞ் செய்யக்கூடாதென்று கூறியிருக்கிறார்கள். இவ்விதியைத் தவறாமல் அனுஷ்டித்தால் இம் மாகாணத்திலுள்ள பல இடங்களையும் இந்தச் சென்னைமாநகரிற் சிலவிடங்களையும் நன்றாகச் சுத்தப்படுத்தவேண்டிவரும். ராஜப்பிளவை, சுவாஸாசயத்திற் பருக்கள் தோன்றும் க்ஷயரோகம், கொள்ளைநோய், இசிவு ஆகிய இவை விஷப்பூச்சிகளினாலுண்டாகும் ரோகங்களெனவும், அந் நோய்களைத் தேகத்தின்பால் அல்லது கிணறீரினால் மற்றவர்களுக்குத் தொற்ற வைக்கலாமெனவும் நாம் அறிந்திருக்கிறோம்.

(இன்னும் வரும்)

கர்னல், உ. ஜி. கிங்கு, சி. ஐ. இ., ஐ. எம். எஸ்.,
சானிடரி கமிஷனர்.

௨

RANI BHAVANI

ராணி பவானி

(௨௪௫-ம் பக்கத்தொடர்ச்சி.)

ராஜாராயதுர்லவர்:—தென்னாட்டிலுள்ள நவாப்பை ஆங்கிலேயர் ஜயித்திருக்கிறார்கள்; ஆதலின், அவர்களைச் சிநேகிக்கவேண்டும்; வைரமாகாது.

ராணிபவானி:—ஓ நிருபோத்தமர்காள்! நான் பெண்பிள்ளையாதலின் தங்களுக்கு இப்படிப்பட்ட ராஜ்யவியாபாரங்களில் யுக்தி சொல்லச் சக்தியற்றவளாக இருக்கிறேன். ஆயினும், என்னுடைய அற்பப்புத்தியைக்கொண்டு சொல்லும் வார்த்தைகளைச் சற்று உற்றுக்கேண்மின். ஆங்கிலேயர் இப்பொழுது வர்த்தகர்களாக இருப்பினும் நாம் அவர்களுடைய சகாயத்தை விரும்பி அவர்களிடத்து நம்முடைய குடுமியைக்கொடுத்தால், இந்த மகாராஜ்யத்தைப் பார்த்து அவர்களுக்கு ராஜ்யாபிலாஷை உண்டாகாமலிராது. அவர்

கள் வர்த்தகராது தராசுத்தட்டைவிட்டு, ராஜ்யத்தைக் கைக்கொள்வரென நம்பவேண்டியிருக்கின்றது. அப்பொழுது நம் கதி என்னே? மகாராஷ்டிராருடைய குணதருபங்களைக் குறித்து நமக்குக் கொஞ்சமாவது தெரியும்; ஆங்கிலேயருடைய விஷயம் சிறிதுந் தெரியாது. ஆகையால், துருக்கரை ராஜ்யாரூடனுக்கவும், விதேசஸ்தர்களான கம்பெனியாரை நாம் தினரைப்போற் சகாயம் வேண்டவும் நான் இசையேன்.

இவ்வாறு வெகுநேரம் வரையில் வாதவிவாதங்கள் நடந்து, கடைசியில் ஏனைய அரசர்களின் பலவந்தத்தினல், ஆங்கிலேயரது சகாயத்தைக்கொண்டு மீர்ஜாபருக்குப் பட்டங்கட்டுவதற்கு ராணி பவானி சம்மதித்து இங்ஙனம் உரைப்பாளாயினள்:—

"மகாராஜர்களே! நீங்களெல்லோருஞ் சம்மதித்து நிச்சயித்த வார்த்தைக்கு விரோதமாக நடத்தல் எனக்குத் தகாது. ஆகையால் உங்களுடைய வார்த்தை எனக்குச் சம்மதமே. ஆயினும், இந்த மாறுபாட்டினல் நம் தேசத்திற்கு எள்ளளவும் லாபமுண்டாகாதென்று என் மனேதேவதை எனக்குச் சொல்கின்றது. இம் மாறுபாட்டினல், துருக்கருக்குள்ள சர்வாதிகாரத்தையும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கின்றோம். துருக்கரை ராஜ்யத்தினின்றொழித்து, இந்துதேசத்தில் இந்து ராஜாவை ஸ்தாபிப்பதற்கான சக்தியுந் தேசாபிமானமும் ஒற்றுமையும் நமக்கு இல்லையெனின், நம் தேசத்தவரான மகாராஷ்டிரரை நாம் நம்பமாட்டோமெனின், நாம் நமது நாட்டை ஹூணரது கையில் ஒப்பிப்பதே வெகு யோக்கியமானது. அவர்களே நமக்கு இதகர்த்தர்களாவார்களாக (நன்மையியற்றுவோராவார்களாக)."

இதன் பிறகு, 1757-ஆம் வருஷத்தில் நடந்த பிளாசீ யுத்தத்திற் கம்பெனியாரும் மீர்ஜாபருங்கூடி சுராஜத்தெளலாவை ஓட்டிய சங்கதி எல்லோருக்கும் தெரிந்ததேயன்றோ?

சரித்திரசாரம்

மேலே வர்ணித்த காலம் இந்துதேச சரித்திரத்தில் முக்கியமான பாகமாகும். துருக்கருடைய ராஜ்யத்தின் க்ஷயத்திற்கும்

ஆங்கிலப் பிரபுக்களின் அப்பியுதயத்திற்கும் (தலையெடுப்பிற்கும்) இது சந்திகால மெனத்தகும். பிரபுத்துவம் இவ்வாறு தலைகீழாகுங் காலத்தின் மகத்துவத்தை அப்பொழுது, ராணி பவானியைத் தவிர வேறெவருங் கிரகித்தவர்க ளல்லரென்பது மேலேகுறித்த சம்பாஷணத்தினல் விளங்கும் விஷயமாகும். ராணியின் வார்த்தையினல் அவளுக்குள்ள ஒப்பற்ற தேசாபிமானம் விளங்குகின்றதன்றே? ராணிபவானி சொல்லிய ராஜ்ய பவிஷ்யத்துக்களெல்லாம் (பின்வருவனவெல்லாம்) தவறாது நிஜமாயினதைக் கண்டு, அவளுடைய ராஜநீதி நிபுணத்துவத்திற்கும், விவகாரத்திலுள்ள தீர்க்க திருஷ்டிக்கும்,மானிடஸ்வபாவத்தின் யதார்த்தஞானத்திற்கும் மிகச் சந்தோஷிக்க வேண்டியிருக்கின்றது. ராஜ்யகாரியங்களின் உண்மையான தத்துவங்களை முழுது முணர்ந்த இந்த லலனா ரத்நமானவள் நம் தேசத்திற் காரியநிர்வாகத்திற்கும் தீர்க்க திருஷ்டிக்கும் பெயர் பெற்ற தோடர்மல், நானபனவிஸ், அக்கன்ன, மாதன்ன முதலானவர்களுக்கும், ஐரோப்பாகண்டத்தில் விவகார வல்லவரென விளங்கிய பிட் (Pitt), பாக்ஸ், (Fox), பர்க்கு (Burke),பிஸ்மார்க்கு(Bismarck),கிளாட்ஸ்டன் (Gladstone) முதலான புருஷபுங்கவர்களுக்கும் சமானமான புத்தியுந் தீரமுமுடையவளெனச் சொல்வதற்குச் சந்தேகமும் உண்டோ? நமதுநாட்டு நாரீமணிகள் இப்படிப்பட்ட புத்திக்கூர்மையுடையவர்களாகஇருக்க, ஸ்த்ரீகள் புருஷர்களைவிடப் புத்தியீனரென்றும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கலாகாதென்றும் சொல்வது விந்தையாமன்றோ? பெண்கல்வி கூடாதென்று மறுப்பவர்கள்,

> "பெண்மகள் கெடுவளென் றஞ்சிப் பெற்றவ
> னுண்மைநூ லவட்குணர்த் தாமை தன்மனைக்
> கண்மறு புருடரைக் காணு மென்றதை
> யெண்மையற் றவன்பறித் தெறித லொக்குமே."

என்னுஞ் செய்யுளைக் கேட்டால் என்னகூறுவார்களோ?

நமது தேசத்திலுள்ள ஸ்த்ரீகளுக்குச் சுவாதந்திரியமில்லையாதலினலும், அவர்களுக்குக் கல்வி புகட்டாததனலும், நாம் அனேக ராணிபவானிகளை இழந்தவர்களானேம். இத்தனை நிர்ப்பந்தங்களிருந்தும் அப்போதைக்கப்போது ராணிபவானியைப்போன்ற நாரீ ரத்

நங்கள் நம் தேயத்திலுதிப்பதைக் காணுமிடத்து, இந்த நிர்ப்பந்தங்களில்லாதிருந்து, நம் ஸ்த்ரீகளுக்கு யோக்கியமான சுவாதந்திரியமும் ஸத்வித்தையும் (நற்கல்வியும்) பிராப்தமாகியிருக்கின் இங்கு இதுகாறும் அநேக ராணிபவானிகள் தோன்றியிருப்பார்களென்பது அதிசயயோக்தியாகாது (மிகைபடக்கூறுவதாகாது).

தருமகாரியங்கள்

கணவனுடைய ஜீவியகாலத்திற் பவானி முதலில் அதிகமான தான தருமங்கள் செய்தவளல்லள். பின்பு,

"அறமே மறங்கண் முழுதழிக்கு மறமே கடவு ளுலகேற்று
மறமே சிவனுக் கொருவடிவ மாகுஞ் சிவனை வழி படுவோர்க்
கறமே யெல்லாப் பெரும்பயனு மளிக்கும் யார்க்கு மெவ்விடத்து
மறமே யச்சந் தவிர்ப்பதெனவறைந்தான் சாதா தபமுனிவன்."

என்னுஞ் சத்தியவாக்கியத்தைக் கடைப்பிடித்து, தேவாலயங்கள் கட்டுவித்தல், குளங்களையும் கிணறுகளையும் வெட்டுவித்தல், அன்ன சத்திரங்களை ஸ்தாபித்தல் முதலான லோகோபகாரமானகாரியங்களை அந்தக்காலத்திலுஞ் செய்துவந்தாள். அவளுக்குத் தெய்வபக்தி மிகுதியுமுண்டு. கணவன் இறந்த பிறகு, மருமகனும் இறக்கவே, தனக்குப் புருஷசந்ததி யில்லாததையுத்தேசித்து அவளுக்குத் தான தருமங்களின் மீது நாட்டம் மேம்பட்டு அவைகளில் அவள் அதிகமாகச் செலவிடலாயினள். இப்படி அவள் நிச்சயித்தபிறகு செய்துள்ள தானதருமங்கள் இவ்வளவு அவ்வளவென்று சொல்லி முடியாது. அவைகளின் விவரங்களைக்கேட்டவர் ஆச்சரியப்படாமலிரார். அவள் செய்துள்ள தானதருமங்கள் பலவும் பெரியசக்கரவர்த்திகள் செய்பத்தகுவனவாம். நித்தியாதி தானதருமங்களுக்குமாத்திரம் வருஷம் ஒன்றுக்கு ரூபா இருபத்தையாயிரஞ் செலவிடுவாள். வேதாத்தியயனஞ் செய்வோர்க்கும் யோகாப்பியாசஞ் செய்வோர்க்கும், அதிதிகளுக்கும், அப்பியாகதிகளுக்கும் அன்னமிடுவதற்கு அவள் அநேக சத்திரங்களைக் கங்காதீரத்தில் ஸ்தாபித்திருக்கிறாள். ஸம்ஸ்கிருத வித்தியாத்தியயனம், வேதாத்தியயனம், சாஸ்திராத்தியயனம் முதலியன செய்யும் மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் நிமித்தமாக வருஷத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாவுக்கு ஏற்பாடு செய்தாள்.

அந்த ஏற்பாடு இன்றைக்கும் நடந்துவருகிறதென்கிறார்கள். அநேக கீர்வாண பாடசாலைகளை யேற்படுத்தி, அவைகளிற் பெரியபண்டிதர்களை உபாத்தியாயர்களாக நியமித்து, வித்தியார்த்திகளுக்குப் பாடசாலையிலேயே சாப்பாடு போடுவதற்கும் ஏற்பாடுசெய்து சாஸ்திரங்களில் தேறினவர்களுக்கு அவரவர்களுடைய யோக்கியதைக்குத் தக்கவாறு வெகுமதிக ளளிக்குமாறு திட்டப்படுத்தி இருக்கிறாள். தான் ஏற்படுத்திய நற்காரியங்கள் தனக்குப் பிற்காலத்தும் இடையறாது நடைபெறக்கருதி, ராணிபவானி ஈஸ்ட் இண்டியா கம்பெனியாரிடத்து லக்ஷக்கணக்காக ரூபாவுங் கட்டிவைத்தாள். அதன் வட்டியைக்கொண்டு அந்தப் பாடசாலைகளும், அன்னசத்திரங்களும் நடைபெற்று வருகின்றன. ஆதலின் இன்றைக்கும் அவளுடைய செலவில் அன்னம் உண்டு, கல்விகற்று அவளை வாழ்த்துகிறவர்களனேகருளர்.

ராணிபவானி அநேக பூதானங்கள் செய்தாள். ஏழைக்குடிகளின் நிலத்திர்வையைத் தள்ளிக்கொடுத்தாள். காசி, கயா, ராஜசாஹி, படாநகர் முதலான பட்டணங்களிற் பெரிய தேவாலயங்களையும் சத்திரங்களையுங் கட்டுவித்தாள். இவற்றுட் காசியிலுள்ள தேவாலயம் மிக ரம்மியமானது. அவள் அநேகநீர்த்துறைகளைக் கல்லினாற் கட்டுவித்தாள். தருமசாலைகள் பலவற்றை ஸ்தாபித்தாள். அநாதைகளுக்கு அன்னமிட்டுக் காப்பாற்றுவதற்கான சாலைகளை நிர்மித்தாள். காசிக்ஷேத்திரத்தில் இவளுடைய சகாயத்தினாற் பிழைத்துவந்தவர்கள் நாலாயிரம்பேர் ஆவர். ராணியின் ஜீவகாருண்ணியம் மனிதர்களோடு நிற்கவில்லை. பசு பக்ஷி கிருமி கீடங்களையுங் காப்பாற்றி வந்தாள். தனது ராஜ்யத்திற்குள் பசு, எருமை முதலானவைகளை வெட்டிக் கொல்லாதவாறு சட்டம் ஏற்படுத்தினாள். பறவைகளுக்காகத் தொட்டிகளில் தானியங்களை இறைத்து வைக்கச் செய்தாள். எறும்புகளுக்குச் சர்க்கரை, மீன்களுக்கு ரொட்டித்துண்டுகள் முதலியன ஏராளமாக அளித்து ஆதரித்து வந்தாள்.

ராணிபவானி தன்னுடைய ராஜ்யத்தில் ஏழைகளான ரோகிகளுக்கு ஔஷதங்கள் கொடுக்கவும், ரோகந்தீரும் வரையில் அவர்

களுக்குப் பத்திய பானங்கள் கொடுத்து உபசரிக்கவும் ஏற்பாடுகள் செய்திருந்தாள். இவள் அன்னதானம் விசேஷமாகச் செய்தமையின் அன்னபூர்ணேயின் அபராவதாரமென வழங்கினள். இந்துக்களுக்கு மாத்திரமேயல்லாது துருக்கருக்குந் தானதருமங்கள் செய்து அவர்களாலுந் துதிக்கப்பெற்றுள்.

அபகாரிக்கு உபகாரம்

ஒருசமயத்தில் ராணிபவானி கயைக்குப் போயிருந்தபோது ஐந்துலக்ஷம் ரூபா கொடுத்தாலன்றி அங்கே பிண்டம் போடக் கூடாதென்று அவ்வூர் அரசன் சொன்னன். இந்தச் சங்கதியை ராணி மூர்ஷிதாபாத் நவாப்புக்குத் தெரிவிக்கவே, அவன் கயாதீசுவரன்மீது படையெடுத்து வந்தான். கயாதிபதி பயந்து ராணியினிடஞ் சரணமடைந்தான். அந்தச் சமயத்தில் ராணி மூர்ஷிதாபாத் நவாப்பைச் சமாதானப்படுத்தி அனுப்பினள். பிறகு, சின்னுட்கெல்லாம் கப்பங்கட்டாததற்காகக் கயாதிபதியை மூர்ஷிதாபாத் நவாப்பு சிறைச்சாலையிற் பிடித்துவைத்தான். அப்பொழுது மறுபடி ராணிபவானி அவனைச் சிறைச்சாலையினின்று விடுவித்தாள்.

ராஜதானி

நாட்டூரிற் கங்காநதி இல்லையாதலின் ராணிபவானி மூர்ஷிதாபாத்துக்கடுத்த கங்காநதிதீரத்திற் படாநகரம் என்னும் ஊரைத் தனது ராஜதானியாக்கிக்கொண்டாள். ராமகிருஷ்ணன் என்னும் ஒரு பிராமணச் சிறுவனைப் பாலியத்திலிருந்து இவள் வளர்த்துவந்தாள். அவனுக்கே தன் ராஜ்யத்தைப் பட்டங்கட்டிக் கைலாசம் புகுந்தாள். இப்பொழுது இந்த ராஜ்யம் ஒரு சிறு ஜமீனுக இருக்கின்றது.

ஸாதுசேவகன்.

NOTES ON ASTROLOGY

சோதிடநூற் குறிப்புகள்

(௨௩௩-ஆம் பக்கத்தொடர்ச்சி)

மலமாசங்கள்

ஸௌரமானமும் சாந்திரமானமும் ஏறக்குறைய ஒரே காலத்தில் நிகழ்கின்றன. எங்ஙனமெனின், ஸௌரமானத்து மேஷமாசம் சாந்திரமானத்துச் சைத்திரமாசத்திலும், ஸௌரமானத்து விருஷபமாசம் சாந்திரமானத்து வைசாகமாசத்திலும், இப்படியே மற்ற மாசங்களும் ஒத்துவருவதைக் காண்க. ஸௌரமானமும் சாந்திரமானமும் அப்படி ஒத்துவராதொழியா. ஏனெனின், சாந்திர மாசங்களுக்கு இடப்பட்டிருக்கும் பெயர்கள் பௌர்ணமிதினத்திற் சந்திரனிருக்கும் நிலையையனுசரித்து வந்திருக்கின்றன; சந்திரனுடைய நிலையோ சூரியனுடையசாரத்தைப் பொறுத்திருக்கின்றது. ஆனால், கிரகங்களின் சாரம் (நடை) எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லையாதலால், சாந்திரமானமானது ஸௌரமானத்தைவிட ஏறக்குறைய பத்துநாள் குறைவாக இருக்கும். வருஷந்தோறும் இப்படி வித்தியாசம் ஏற்பட்டுக்கொண்டேவரின், மூன்று வருஷத்திற்கொருமுறை ஸௌரமானத்து மாசங்களுக்கும் சாந்திரமானத்து மாசங்களுக்கும் பெரியவித்தியாசம் ஏற்படுமென்பது தெளிவு. இந்த வித்தியாசத்தை அப்போதைக்கப்போது ஒழிக்காவிடின் அந்தந்த மாதங்களைப் பகுத்தறிந்து நிச்சயிப்பது கஷ்டமாகும்; அல்லது, சோதிடசம்பந்தமான கணக்குகளெல்லாங் குளறிப்போம். இந்தக் கஷ்டத்தை நிவிர்த்திக்கும்பொருட்டு மூன்று வருஷத்திற்கொருமுறை மலமாசங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்கையனுசரித்து, சைத்திரமாதத்திற் சூரியன் மேஷத்திற்பிரவேசிப்பதற்குப்பதிலாக விருஷபத்திற் பிரவேசிக்க நேரும்போது, இன்னுமொரு சைத்திரமாதம் அதிகமாக இடையிற்சேர்க்கப்பெறும். இப்படி இடையிற் சேர்க்கப்பட்ட மாசத்திற்கு மலமாசம் என்று பெயர். மலமாசம் என்பது அதிகமாசம், க்ஷயமாசம் என இரு

வகைப்படும். தினங்கள் கூடியிருக்கும்பொழுது அதிகமாசமென்றும், தினங்கள் குறைந்திருக்கும்பொழுது க்ஷயமாசமென்றும் அந்த மலமாசம் வழங்கப்பெறும். ஆரியதர்ம சாஸ்திரங்கள் பின்வருமாறு அவைகளுக்கு நிர்வசனங் கூறுகின்றன:—

"சூரியன் சஞ்சரிக்கும் ராசியில் வித்தியாசமில்லாதிருக்குமாயின், அஃது அதிகமாசம் எனப்படும்;" அஃதாவது, மேற்கூறியஉதாரணத்தி லிருப்பதுபோல ஸௌரமானத்து மாசத்திற்குஞ் சாந்திரமானத்து மாசத்திற்கும் ஏறக்குறைய முப்பதுநாள் வித்தியாசமிருக்குமாயின், அதிகமாசம் ஏற்படும்; தெளிவாகச் சொல்லுமிடத்து, ஒரு ஸௌரமானத்திற் பதின்மூன்று சாந்திரமாசங்கள் வரின், அதிகமாசம் ஏற்படும்.

"ஒரே சாந்திரமாசத்தில் சூரியன் ஒரு முழுராசிக்கு அதிகமாகச் சஞ்சரிக்கின், க்ஷயமாசம் ஏற்படும்.'' பின்வரும் உதாரணத்தைக் காண்க:—

சாதாரணமாகச் சாந்திரமாசமென்பது சுத்தப்பிரதிபதமுதல் அமாவாசை வரையிலுமுள்ள (ஏறக்குறைய) முப்பது நாள் கொண்டது. ஆனால், ஸௌரமாசத்துத் தினங்களோ, ஆங்கிலமாசங்களைப்போல, ஒரு சீராக இருப்பதில்லை. ஆகையால், ஒரு ஸௌரமாசத்திற்கு, பிப்ரவரிமாசத்தைப்போல, இருபத்தெட்டு நாட்களே இருக்கும்போது, இரண்டு ஸௌரமாசங்கள் ஏற்படுவது சாத்தியமாமன்றே? அவற்றுள் முதலாவது மாசம் ஒரு ராசியிற் சஞ்சரிக்கும் இருபத்தெட்டுநாள் கொண்டதாகும்; மற்றொன்று, அடுத்த ராசியிற் சூரியன் சஞ்சரிக்கும் இரண்டு தினங்கள் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட யோகம் நேரும்போது அந்தமாதத்திற்கு க்ஷயமாசம் என்று பெயர். ஏனென்றால், ஒரு ஸௌரமானத்திற் பதினொரு சாந்திரமாசங்களே வரும்.

அதிகமாசமென்பது அடிக்கடி வரக்கூடியது; முப்பது அல்லது முப்பத்தொரு மாசங்களுக்கொருமுறை கிரமமாக வந்துகொண்டே இருக்கும். க்ஷயமாசமோவெனின், அதுமிகவும் அபூர்வமாகநூற்

றுநாற்பத்தொரு வருஷத்திற் கொருமுறை வரும்; அதனையடுத்து ப்பத்தொன்பது வருஷத்திற்குப்பிறகு மற்றொருமுறைவரும். இந்த விதமாகவேஅது மாறிமாறி வந்துகொண்டிருக்கும். ஸௌரமாசங்கள் குறுகியிருக்கும் மாரிகாலத்திலேயே க்ஷயமாசம் வரும்.

இந்து பண்டிகைகளும் விரதாதிகளும் பிதிர்க்களுக்குச் செய்யும் சிராத்த திதிகளும் மலமாசங்களினால் மாறுகின்றமையின், மலமாசங்களை மிகத்திட்டமாகக் கணக்கிட்டுக் கவனித்து வருகிறார்கள். இவை, காலப்பிரிவுகளுள் சிறப்பு உட்பகுதிகளாகும்.

கிரகங்கள் ஒவ்வொரு ராசியிற் சஞ்சரிப்பதை யனுசரித்து ஏற்படும் பற்பல காலப்பகுதிகளைப் பின்னர்க் குறிப்பாம்.

பொழிப்பு

ஆராயு மனமுடையார், மேற்கண்ட சுருக்கமான குறிப்புக்களினின்று தெரிந்துகொள்ளத்தக்க விஷயங்களாவன:—

1. இந்தப்பூமியைத்தவிர வேறு உலகங்களும் இருக்கின்றன.

2. கிரகங்களின் ஆட்சி பூமியின்மீது மாத்திரமே செல்லும்.

3. தேவர்கள் மனிதரைவிட மேலானவர்கள்; சிருஷ்டிகர்த்தரான நான்முகப் பிரம்மாவே அவர்களுக்கு நேரான அதிபதி; அந்த நான்முகப் பிரம்மாவோ சர்வவல்லமையுள்ள ஈசுவரரது ஆக்கினைக்குட்பட்டவர்.

4. பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு ஆதியுமுண்டு அந்தமுமுண்டு. ஒருவிதமான கிரமப்பொருத்தமும், நாட்கள் ருதுக்கள் வருஷங்கள் ஆகிய இவை சுழன்று சுழன்று வரும் முறையும் அடங்கிய இந்தச் சிருஷ்டிக் கிரமமானது பொய்யாகாது.

5. இந்து சாஸ்திரங்களின்படி பராபரவஸ்துவாக விளங்கும் ஈசுவரர் ஒருவரேயல்லாது, இந்துமதத்திற் பலதெய்வங்கள் கிடையா. இந்துக்கள் பல தெய்வங்களைக் கொண்டாடுகிறார்களென்று பிறமதத்தவர்கள் நினைப்பது தவறு. ஏனெனின், நான்முகப்பிரமன்

முதலான தேவர்களெல்லோரும் ஈசுவரருடைய வேலைக்காரர்களே யாவர்.

வேதாந்தங்கற்றுத் தெளிவதற்குச் சோதிடநூல் உபயோகிக்கத்தக்கதெனின், வருங்காரிய முரைப்பதற்கு அந்நூலை யுபயோகிப்பதெங்ஙனம்? காலம் மாறிமாறி வருவதுபோலவே சிருஷ்டிக்கிரமமும் மாறிமாறி வருகின்றது. ஒருவிதமான காரியம் நடப்பதற்குக் கிரகநிலைகளும் மற்றச் சந்தர்ப்பங்களும் ஒருமாதிரியாக அமைந்திருக்கவேண்டும். இது பொதுவான விதியாகும். இந்த விதியையனுசரித்து, கிரகங்களின் தன்மைக்குஞ் சந்தர்ப்பங்களின் தன்மைக்கும் தக்கவாறு காரியங்கள் இன்னமாதிரியாக நடக்குமெனக்கூறுவது இயல்பேயாகும். கோடைக்காலத்திற் வெயிலெரிக்குமென்பதும், சில சந்தர்ப்பங்கள் கூடினாற் கோடையிலும் மழைபெய்யுமென்பதும் இயற்கை விதியையனுசரித்தேயன்றோ? நெருப்புச் சுடுமென்பதும், சில சந்தர்ப்பங்களிற் சுடாதென்பதும் இயற்கை விதியையனுசரித்தேயன்றோ? முந்திய மன்வந்தரத்து அநுபவங்களைக்கொண்டு பின்வரும் மன்வந்தரத்தில் நடக்கும் காரியத்தை ஊகித்தறியலாகும். கலியுகத்தில் ஜனங்கள் பாபகர்மங்களுக்குள்ளாவார்களென்பதும் திரேதாயுகத்திற் பக்தி மிகுந்திருப்பார்களென்பதும் முந்திய மன்வந்தரத்து யுகங்களின் அநுபவத்தைக்கொண்டேயாகும். அப்படியே ஒருதடவை விருச்சிகராசியிற் சனிக்கிரகம் சஞ்சரித்தபோது க்ஷாமமும் ரத்தக்களரியும் ஏற்பட்டிருந்தால், மற்றொருமுறை அந்தக் கிரகம் அந்த ராசியிற் சஞ்சரிக்கும்போது அதே பயன்கள் விளையும். இதே மாதிரியாக ஒவ்வொரு காரியத்தையும் தனித்தனியே கவனித்து அவைகளினின்று பொதுக்கணக்குகளும் விதிகளும் ஏற்படுத்தியிருக்கலாமன்றோ? இதுவன்றி, ஒரு காலத்தைக் குறிக்குமிடத்து அதைக்கொண்டு ஒருகாரியத்தையும் பொதுவாகத் தெரிந்துகொள்வது நமக்கு வழக்கமாகவேயிருக்கின்றது. 'இது நடுநிசிவேளையென்று' நாம் தெரிவோமாயின், 'இந்தவேளையில் ராமனென்பவன் தூங்கிக்கொண்டிருப்பான்' என்பதையுந் தெரிந்துகொள்கிறோம். ஆனால், மானிடரது காரியங்களெல்லாம் எப்பொழுதும் ஒரேசீராகவும் கிரமமாகவும் இராமல் மிக

வும் வேறுபட்டுக்கொண்டே இருக்குமாதலால், அவைகளினின்று பொதுவிதிக ளேற்படுத்தலாகாதெனக் கருதிக் கிரகங்களின் சாரங்களையும் நிலைமைகளையுங் காரியங்களுக்கு அறிகுறியாக வைத்துக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

தேசமும் அதன் விபாகங்களும்

சோதிடநூலுக்குரிய காரியங்களுக்காக இந்தப் பிரபஞ்சமனைத்தும் பன்னிரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு ராசி என்றுபெயர்.

மேற்சொல்லிய பன்னிரண்டுராசிகளின் நிலைமைகளும், கிரகங்கள் அவைகளைச் சுற்றிச் சஞ்சரிப்பதாக நினைக்கப்பெறும் விதமும், உலகத்திற் காணப்படுகிற பற்பல காரியஙகளும், காட்சிகளும் உண்டாகும் விதமும் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களாகும். தேசத்தின் முக்கியமான உட்பிரிவுகளை மாத்திரம் இங்கே குறிப்பது போதுமானது.

மேற்சொல்லியபடி தேசவிபாகங்கள் ஏற்படுவதற்குப் பூமியின் நிரக்ஷரேகையே எல்லையாகும்.

பூமியின்மீது மாத்திரமே கிரகங்களுக்கு ஆட்சியுண்டென்று முன்னரே சொல்லியிருக்கிறோம். இந்தப் பூமியொன்றே அகிலப் பிரபஞ்சமாகாது; அகிலப்பிரபஞ்சம் அல்லது பிரம்மாண்டம் என்பது இந்தப் பூமியைப்போன்ற பதினான்கு பாகங்கள் கொண்டதாகும். ஒவ்வொருபாகமும் ஒவ்வோருலகம் எனப்படும். எனவே, பிரம்மாண்டத்திற் பதினான்கு உலகங்க ளடங்கியிருக்கின்றன. ஒவ்வோருலகமும் ஒவ்வொரு கண்டம் எனத்தகும். தேசத்தின் உட்பிரிவுகளான இந்தப் பதினான்கு உலகங்களின் விவரங்களை ஸ்ரீமத்-பாகவதத்தில் மூன்றாவது ஸ்கந்தத்திலும் ஐந்தாவது ஸ்கந்தத்திலுங் காணலாகும்.

ராசி

ஒரு ராசியென்பது முப்பது பாகங்களாக (பாகைகளாக)ப்பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒருபாகம் (பாகை) அறுபது லிப்திகளாக

(கலைகளாக) ப்பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒருலிப்தி (கலை) அறுபது விலிப்திகளாக (விகலைகளாக) ப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

60-விலிப்தி கொண்டது ஒரு லிப்தி

60-லிப்தி கொண்டது ஒரு பாகம்

30-பாகங் கொண்டது ஒரு ராசி

இவைகளைவிட சூக்ஷ்மமான உட்பிரிவுகளை ஷட்வர்க்க ரீதியாகக் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

கிரகங்கள்

ஆரியருடைய சோதிடக் கிரந்தங்களில் கிரகங்களின் சங்கியை எல்லா இடத்திலும் ஒரே சீராக எடுத்துக்கொள்ளப்படவில்லை. சில ரிஷிகள் ஒரே கிரகத்தைக்கொண்டு விவகரிக்கிறார்கள்; சிலர் இரண்டு கிரகங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; சிலர் ஏழு கிரகங்களைக் கணிக்கிறார்கள்; வேறு சிலர் ஒன்பது கிரகங்களைக் கணக்கிடுகிறார்கள்; பதினாறு கிரகங்களைக்கொண்டு சோதிடம் சொல்வாருமுளர். இப்படி அவர்கள் வேறுவேறுசங்கியையைக் கைக்கொள்வதனால், அவரவர்கள் ஒப்புக்கொள்ளாத கிரகங்கள் உளவென்பது அவர்களுக்குத்தெரியாதென்று சொல்வதற்கிடமில்லை; மற்றக்கிரகங்கள் இருக்கின்றனவோ இல்லையோ என்றுசந்தேகப்பட்டு அவர்கள் அவைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாதொழித்தனரென்பதற்குங் காரணமில்லை. நாம் சொல்லக்கூடியதென்னையெனின், ஒவ்வொருசித்தாந்தத்தலைவர் ஒவ்வொரு கிரகத்தின் சாரத்தையேகொண்டு கணக்கிட்டா ரென்பதேயாம். உதாரணமாக, சூரியசித்தாந்தக்காரர் சூரியனது சாரத்தையே ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டுச் சாஸ்திரமெழுதினார்; சுக்கிரநாடிக்காரர் சுக்கிரனுடைய சாரத்தையே முக்கியமாகக் கொண்டு நூல் தொகுத்தார்.

(இன்னும் வரும்)

ஆரியன்.

ஸ்ரீ

பாண்டிய சாசநம்

(ஆழ்வார்திருநகரி ஆதிப்பிரானுழ்வார் ஸந்நிதியினுள் ஸ்ரீஜ்ஞாநப்பிரான் ஸந்நிதிவாயிலின் தென்பக்கம்.)

I

ஸ்ரீ கோமாறவாமன குலசேகரதேவனின ௪-வது யாணடு

1 சீரமெயககீாததி

(அகவல)

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ ॥
திருவ........................பாலலகுறதிரு
மகளபுணரவும
காாபொல கூ (2) நதற கலைமகள கலபபவும
பாாமக மனததுப பாஙகுட னிருபபவுஞ
செஙகொ னடபபவும வெணகுடை நிழ (3) றறவுங
கருஙகலி முருஙகவும பெருமபுகழ விளஙகவுங

---

1 **‘சீரமெயகீாததி’** என்பது சாசநங்களின் முகப்பில் அரசர்களது பெருமையை அகவல் முதலிய பாக்களாற் கூறுவது. பன்னிருபாட்டியலார், தம்பாவினத்தினு ளொன்ருக இதையுஞ் சேர்த்திருக்கிருர்.

பன்னிருபாட்டியல்

(இனவியல் ௬௭. சீர்மெய்க்கீர்த்தி)

“சீர்நான் காதி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு
மவனுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி (௧௪௨)

நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியி னந்த
முறையாய் முடியு மெனவுரைத் தனரே.” (௧௪௩)

கோவூர் கிழார்

கானகு செமபியன கடமபுலி யாளவு
மீனம (4) பொனவரை மீமிசை யொஙகவு
முததமிட பனுவலு நானமறை முழுவது
மெததனைவச சமையமு மி (5)னிதுடன விளஙகவுஞ
சிஙகளங கலிஙகங தெலிஙகஞ செதிபம
கொஙகணங குககிரங கொசலங குச (6) சர
முறைமயி லாளு முதுநில வெநதா
திறை காடடிச செவடி வணஙக
மனனா மாதா பொனனணி கவரியு
ளி (7) ருபபுடை மருகிலு மொருபடி யிரடடப
பழுதறு சிறபபிற “சேழுவை காவலன”
வீரஸிம் ஹாஸநத தொராங கிருததி
யாரு(8)ம வெமபு மணியிதட புடையிற
தாருஞ சூழநத தடமணி மகுடம
பனனூ றாழி தொனனிலம புரநது
வாழ(9)கன சூடட மகிழநதுடனஞ சூடி
அலாமகள முதலா வரிவையாபா

(உரை)

‘வுலகமுழு துடை யா’ொடு வீறறிருநதரு (10) ளிய “கோமுதற ஸ்ரீ கோ மாற பனமரான” திரிபுவநசககரவாததிகள “ஸ்ரீகுல சேகரதேவறகு” II யாணடு ‘நாலு’ நாளிருநூற(11)றெடடினு ல சேபங கொணடசோழபுரததில தெறகிற தொபபிற கொயிற பளளி யறைககூடததுபபளளி(12)பபீடம காலிஙகராயனில எழுநதருளியி ருநது ஒடநாடடடிகளசெயயத திருவாயமொழிநதருளின(13)படி திருவழுதிவளநாடடுததிருககுருகூர பொலிஞசுநின றருளிய பரமஸவாமி கள கொயிற திருககுருகூர மாமுனிகள (14) ஸிஷ்யரில திருவாயமொழிமாமுனி களுககு இவவொடநாடடடிகள செயவிககிற அருளாள

II. இவனை, ‘டாக்டர் கீல்ஹார்ன்’ துரை. கி. பி. 1268-ம் ஆண்டு ஜூன் மீ 2உ-க்கும் 27உ-க்கும் மத்தியில் பட்டத்துக்கு வந்தவனாக எண்ணுகிறார். ‘ஸிவல்’ துரை மேற்கண்ட ஜூன் மீ 10உக்குமுன் இவன் பட்டத்துக்கு வந்திருக்கமுடியாதென்கிறார்.

ஷாஸா மடததில வததிககும அஷ(15)ாஷஸ விஷயதது III ஸுஹ
விஸாநுகளுககு ஹொஜன முளளிடடு வெணடுவனவுககு இநநாட்டு
ஸ்ரீவைகுநதமானஇராசெந(16)திரசசதுவெதிமஙகலததுக "கிராஞ
சிஇளையதிவாகரபடடனுளளிடடாரும 'காரமபிசசெடடுஉதையதிவா
கரபடடனுளளி(17)டடாரும "கருமாணிககாழவானும பககல இவா
விலைகொணடுகுடுதத இவவூரபிடாகை இசஙகனகுளமும நெடுஙகுள
மும விலைஓ(18)லைபபடிநானகெலலைககுடபடடநிரநிலமும கருஞசெ
யபுனஞசெயும நததமும தொடடமும குளமும குளபபரிபபும உட
படட நில(19) ததிலபழநதெவதானமபளளிககநதமIV நீககியுளள நி
லம கடமையும அநதராயமும விநியொகமும தருவதான அசசும
கா(20)ரிய ஆராசசியும வெடடி (?) பாடடமும பஞசிபீலியும சநது
விஹுஹபபெறுமV வாசறபெறும இலாஞசினைப பெறும தறியிறை
(21)யுமசெககிறையும தடடொலிபாடடமும இடையாவரியு மினVI
வரியுமபொனவரியுமறறு மெபபொபபடினவு முடப(22)டநாலாவது
முதல மடபபுற இறையிலியாக இடபபெறவெணுமெனறு 'காலிங
கராயா' நமககுச சொனனமையி (23)ல ததிருககுருகூர பொலிஞசு
கினறருளிய பரமஸவாமிகள கொயில திருககுருகூர மாமுனிகள
ஸிஷ்யரில திருவாயமொழிமாமுனிகளுககு(24) இவவொடநாட
டிகளசெயவிககிற அருளாள ஷாஸாமடததில வததிககும அஷா
ஷாஸவிஷெயதது ஸுஹவிதவானகளுககு ஹொஜனமுளளிடடுவெ
(25) ணடுவனவுககு இ ஸ்ரீவைகுநதமான இராசெநதிர சதுவெ
தி மஙகலததுக கிராஞசி இளையதிவாகரபடடனுளளிடடாரும காரம
பிசசெடடு உதை (26) ய திவாகரபடடனுளளிடடாரும கருமாணி
ககாழவானும பககல இவவொட நாடடிகள விலைகொணடு குடுதத
இவவூரபி(27)டாகை இசஙகனகுளமும நெடுஙகுளமும விலை ஓலைப்
படி நானகெலலைககுடபடட நீரநிலமும கருஞசெய புனசெயும நத

IV. அருகன் கோயில் 'கந்தன்பள்ளி' என்பது பள்ளிக்கந்தம் என நின்றது. "கந்தன்பள்ளிக் கடவுளர்க்கெல்லா, மந்தி லாளங்கத்தகன்பொழிலகன்வயின்" (காடுகொண்காதை - சிலப்பதிகாரம்) என்பதும் நோக்குக.

III. பதினெண் தேயத்து.

V. பேறும்.

VI. 'மீன்வரி' 'இனவரி', என்றுமாம்.

தமும தொட(28)டமும குளமும குளபபரிபபும உடபட்ட நிலத தில பழநதெவதானம பளளிககநதம நீககியுளள நிலம கடமையும அநதராயமும வினியோ (29) கமும தருவதான அசசும காரிய ஆராசசியும வெட்டி பாட்டமும பஞசுபீலியும சநது விழ றபபெ றும இலாஞசினைபபெறும தறியிறையும செககிறையும தடடொலி பாட்டமும இடையாவரியுமினவரியும பொனவரியு மறறுமெறபெற படடினவுமுடப(31)ட இவவாணடுமுதல மடபபுற இறையிலியாக இ டுகவெனறும இபபடி சநதிராதிதயவஸ செலவதாகக கலலிலும செம பிலும(32)வெட்டிவித்துக கொளகவெனறு திருவாயமொழிநதருளி னா II

இவைபுனவற வளநாடடுநீரமடையூா கூநதலசங(33)கரநாராய ணன தெனனவதரையன எழுதது.

III. இவை பொழியூாநாடடு பொழியூரான பாரதிபசெகர நலலூா வரநதருவானபபனனைகாடுவெட்டி எழுதது III

அப்பு. சடகோபராமாநுஜாசார்யன்.

நுண்பொருண்மாலை

(செந்தமிழ் எ-ம் தொகுதி ௯௬௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

௯௪௧. "மிகினுங்..............மூன்று."

நு - லை:—மூன்று மென்பது மூன்றென்றதனுன் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

௯௪௬. "இழிவறிந்..............ணேய்."

நு - லை:—விதியெதிர்மறைகளை யுவமமும் பொருளுமாக்கிய திரண்டானும் பெறுதற்கு.

௯௫௦. "உற்றவன்..............மருந்து."

நு - லை:—நாற்கூற்றதென்பது, கூற்றெனச் செய்யுட் டொடைக்காரண விகாரமாயிற்று.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.